Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, APRIL 26, 2022

செவ்வாய்க்கிழமை ஏப்ரல் 26, 2022 | ஒளி: 07 கதிர்: 289 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## இந்தியாவின் மருந்துப்பொதி நாளை கிடைக்கும்



இந்திய அரசாங்கத்தின் கடனுதவியில் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சைக்கு தேவையான மருத்துவப் பொருட்கள் உள்ளடங்கிய பொதி நாளை புதன்கிழமை இலங்கைக்கு கிடைக்கும் எனவும், 340 மில்லியன் ரூபாய் பெறுமதியான அத்தியாவசிய மருந்துகள் அடுத்தவாரம் இந்தோனேசியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்படும் எனவும் சுகாதாரத்துறை அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சீனத்தூதுவர் கிழக்குக்கு செல்கின்றார்

இலங்கையின் வடக்கு மாகாணத்துக்கு அண்மையில் விஜயம் செய்த போது, அங்குள்ள தமிழ் மக்கள் அன்புடனும் விருந்தோம்பல் பண்புடனும் இருந்ததைக் கண்டதாகத் தெரிவித்த இலங்கைக்கான சீன தூதுவர் சீ சென்ஹொங், அடுத்த மாதம் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### ஐ .எம். எஃப் – இலங்கை பேச்சுவார்த்தை

# சீனா அதிருப்தி

### 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவி குறித்த பேச்சுவார்த்தையும் தாமதமாம்



கடன் மீள்கட்டமைப்பு குறித்து இலங்கை தற்போது எடுத்துள்ள முடிவானது எதிர்காலத்தில் இருதரப்பு கடன்களில் நிச்சயமாக தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும், கடன் மறுசீரமைப்பு கட்டமைப்பு தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கான இலங்கையின் முடிவானது, இலங்கைக்கான 2.5 பில்லியன் டொலர் சீன நிதி உதவி குறித்த பேச்சுவார்த்தைகளை தாமதப்படுத்தியுள்ளது எனவும் இலங்கைக்கான சீனாவின் தூதுவர் சீ சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## சேவலின் முடிவில் திடீர் திருப்பம்

### நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு என அறிவிப்பு

எஸ்.கணேசன்



அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது நடுநிலை வகிப்பதாக முன்பு அறிவித்திருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தற்போது, பிரேரணையை ஆதரிக்கப்போவதாக அறிவித்துள்ளது.

மக்கள் பக்கம் நின்றே இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இந்த முடிவை எடுத்துள்ளதாக அக்கட்சியின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் இ.தொ.காவின் நிலைப்பாட்டை வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### இடைக்கால அரசாங்கம்:

## ஜனாதிபதி பச்சைக்கொடி காட்டியதாக அஸ்கிரிய பீடம் அறிவிப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினை, நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வை வழங்கும் வகையில், இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளதாக அஸ்கிரிய பீடத்தின் அநுநாயக மெதகம ஸ்ரீ தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### ஒரு வாரத்துக்குள் அரசாங்கம் முடிவெடுக்காவிடின்

## ஏப்ரல் 28இல் மாபெரும் தொழிற்சங்க போராட்டம்

ஒரு வாரத்துக்குள் அரசாங்கம் முடிவெடுக்கத் தவறினால், ஏப்ரல் 28ஆம் திகதியன்று அரச, அரசுசாரா, தனியார், விவசாயிகள், தொழிலாளர்கள் பங்கேற்கும் மாபெரும் தொழிற்சங்கப் போராட்டம் நடத்தப்படும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பொலிஸாரின் கோரிக்கை நிராகரிப்பு



### மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

பா.நிரோஸ்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அரசாங்கம் பதவி விலக வேண்டுமென வலியுறுத்தி ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் முன்னெடுக்கப்படும் தொடர் போராட்டம் நேற்று (25) 16ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

### நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு

## 120ஐ பெற்றுவிட்டோம்



அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் 39 பாராளுமன்ற உறுப்பினர்களும், அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## அரசாங்கம் கவிழும்வரை எதிர்க்கட்சிகள் ஓயாது

### எமது பலத்தை காட்டுவோம் என்கிறார் ஹரின்

பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்க விரும்பவில்லை என்றால், தற்போதைய அரசாங்கத்தை வேறு வழிகளில் கவிழ்க்க வேண்டி ஏற்படும் என்று தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, தற்போதைய அரசாங்கம் கவிழும் வரை எதிர்க்கட்சிகள் ஓயாது என்றார்.

கொழும்பில் நேற்று (25) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### முதலீட்டையும் பொருளாதார வாய்ப்புகளையும் ஊக்குவிப்பதற்கு

## அமெரிக்கா முன்னுரிமை வழங்கும்

### அரசியல், சிவில் மற்றும் மதத்தலைவர்களுடனான சந்திப்பில் தூதுவர் ஜூலி சங் தெரிவிப்பு





வடக்கு மாகாணத்திற்கான ஒத்துழைப்புகளை தொடர்ச்சியாக வழங்குவது குறித்து ஆராயும் விதமாக வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், வடக்கு பிராந்தியத்திற்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிப்பதற்கான வழிகளை ஆராய்வதற்கும், வாய்ப்புகளை உருவாக்குவதில் கவனம் செலுத்தும் மாற்றங்களைச் செய்பவர்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கும், ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் அனைத்து இலங்கையர்களும் உள்ளடங்கிய நிர்வாகத்திற்கான உறுதிப்பாட்டை வலியுறுத்தும் விதமாகவும் தான் யாழ்ப்பாணத்திற்குச் சென்றதாக தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## பதவியில் இருந்து விலகுவதாக பிரதமர் அறிவிக்கவில்லை

### கம்மன்பில சொல்வது பொய் என்கிறது பிரதமர் அலுவலகம்

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்னும் பெரும்பான்மையான பாராளுமன்ற ஆசனங்களைக் கொண்டிருப்பதால், பிரதமர் பதவியில் இருந்து விலகப் போவதாக எந்தவொரு குழுவுக்கும் அறிவிக்கவில்லை என பிரதமர் அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## எனது வாயை அடைக்க முயற்சிக்கின்றனர்

### பிரதி சபாநாயகர் பதவியை எடுக்க மாட்டேன் என்கிறார் சுமந்திரன்



பாராளுமன்ற பிரதி சபாநாயகர் பதவியை கொடுத்தாலும் நான் எடுக்கப்போவதில்லை. எனது வாயை அடைக்கவே இவ்வாறான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### ஈஸ்டர் தாக்குதலில் பலியானோருக்கு

## வத்திக்கானில் புனித ஆராதனை

2019ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவரையும் நினைவுகூர்ந்து பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் மற்றும் கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஆகியோர் புனித பீற்றர்ஸ் பெசிலிக்கா பேராலயத்தில் நேற்றையதினம் (25) புனித ஆராதனையை நடத்தினர்.

இலங்கையின் கத்தோலிக்க ஆயர்கள் குழுவினரும் தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் காயமடைந்தவர்களும் புனித பாப்பரசருடன் இணைந்து கொள்ள தீர்மானித்து வத்திக்கானுக்கு சென்றிருந்தனர். அத்துடன், பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண இலங்கை அரசாங்கம் தவறியதால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து இலங்கையர்களுக்காகவும் புனித ஆராதனை நடைபெற்றது.



PAGE 1 தொடர்ச்சிகள்

## சீனத்தூதுவர் கிழக்கிற்கு செல்கின்றார்

நேற்று (25) கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சிந்தனை அவர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கு விஜயம் செய்யுமாறு கிழக்கிலுள்ள மக்கள் மற்றும் அமைப்புகளிடமிருந்து தமக்கு அதிகளவான கோரிக்கைகள் வந்ததையடுத்தே அடுத்த மாதம் அங்கு பயணம் செய்யவுள்ளதாகத் தெரிவித்தார்.

# சீனா அதிருப்தி

கொழும்பில் நேற்று (25) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். மேலும் கூறுகையில்,

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை முன்னெடுக்கும் பேச்சுவார்த்தைகளை சீன உன்னிப்பாக கவனித்துக்கொண்டுள்ளது. அத்துடன் தீவு நாடுகளுடன் வொஷிங்டன் நடத்தும் பேச்சுவார்தைகளையும் சீனா உன்னிப்பாக கவனித்துக்கொண்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறு இருப்பினும் இலங்கை கேட்டுக்கொண்டதற்கு இணங்க சீனா ஒப்புக்கொண்டபடி பழைய கடன்களை தொடர்ந்து வழங்கும், இப்போதும் 2.5பில்லியன் அமெரிக்க டொலர் கடன் குறித்த கோரிக்கையை சீனா பரிசீலித்துக்கொண்டுள்ளது.

சீனா கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் 2022 ஜனவரி மாதம் வரை 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான 730,000 மெட்ரிக் தொன் எரிபொருளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியுள்ளது. இதற்காக, மொத்தம் 12 கப்பல்களுக்கான கட்டணமாக, 390 மில்லியன் டொலர்களை இலங்கை செலுத்த வேண்டியுள்ளது அதில் 7 கப்பல்களுக்கு மாத்திரம் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை எந்தவொரு அரசாங்கத்தின் கீழும் சீனாவின் ஆதரவு தொடரும். சீனா, இலங்கை மக்களுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும். அந்த ஆதரவானது ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி அல்லது பிராந்தியத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தியாவின் மருந்துப்பொதி நாளை கிடைக்கும்

இலங்கையில் தற்போது பாரிய அளவிலான மருந்து தட்டுப்பாடு நிலையொன்று ஏற்பட்டுள்ளதாக வைத்தியத்துறையினர் மற்றும் எதிர்க்கட்சியினர் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வருகின்ற நிலையில், ஒரு சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு உள்ளது என்பதை ஏற்றுக்கொண்டுள்ள சுகாதாரத்துறை அமைச்சர் சன்ன, வெகு விரைவில் மருந்து தட்டுப்பாடு நீங்கும் எனவும் கூறினார்.

இந்தியாவின் நிதி உதவியில் பெற்றுக்கொள்ளவுள்ள 101 வகையான மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சைக்கான பொருட்கள் அடங்கிய பொதி நாளை புதன்கிழமை இலங்கைக்கு கிடைக்கும் எனவும், பல்வேறு நாடுகளில் இருந்து ஒட்டுமொத்தமாக 186 அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு 19.22 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி இப்போதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## சேவலின் முடிவில் திடீர் திருப்பம்

நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படும் என அறிவிப்பு விடுத்தவர்களுக்கு கூட, அது வெற்றிபெறுமா என்ற சந்தேகம் இருந்தது. அதுமட்டுமல்ல உள்ளடக்கங்கள் பற்றி எம்முடன் பேச்சு நடத்தப்படவில்லை. அதனால் தான் நடுநிலை என்ற அறிவிப்பை விடுத்தோம் எனவும் கூறினார்.

தற்போது பிரேரணை பற்றி எமக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. அது வெற்றியளிக்ககூடிய சாத்தியமும் காணப்படுகின்றது. பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்பதுதான் மக்களின் கருத்து. மக்களின் தீர்ப்பே, எமது அரசியல் நடவடிக்கை. அந்த கொள்கையின் அடிப்படையில் செயற்படும் கட்சியே இ.தொ.கா எனவும் ரா மேஷ்வரன் தெரிவித்தார்.

## ஜனாதிபதி
### பச்சைக்கொடி காட்டியதாக அஸ்கிரிய பீடம் அறிவிப்பு

நாட்டின் நெருக்கடி நிலைமைகளை தொடர்பில் மகா சங்கத்தினர் ஜனாதிபதிக்கு எழுதியக் கடிதத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ பதில் கடிதம் ஒன்றை வழங்கியுள்ளார். இக்கடிதத்திலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்டு வரும் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் இக்கடிதத்தில் ஜனாதிபதி தெளிவுப்படுத்தியுள்ளதாகவும், அரசியலமைப்ப திருத்தம் தொடர்பில் பாராளுமன்றத்தில் கலந்துரையாடப்பட்டு அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை இது தொடர்பில் எதிர்காலத்தில் ஏதாவது கருத்துக்கள் காணப்படுமாக இருந்தால் அது தொடர்பிலும் மாநாயக்க தேரர்களுக்கு விளக்கமளிப்பதாகவும் ஜனாதிபதி தனதுக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாகவும் அஸ்கிரிய பீடத்தின் அநுநாயக மெதகம ஸ்ரீ தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

## பொலிஸாரின் கோரிக்கை நிராகரிப்பு

போராட்டக்காரர்களால் உருவாக்கப்பட்டுள்ள கோட்டாகோகமவுக்கு நாடுமுழுவதிலிருந்தும் பல் வேறுத் தரப்பினர்கள் நேற்று வருகைத்தந்து தங்களது போராட்டக்காரர்களுக்கு தங்களது ஆதரவைத் தெரிவித்தனர்.

இதேவேளை, அலரி மாளிகைக்கு முன்பாக போராட்டங்களை மேற்கொள்வதற்குத் நீதிமன்றம் தடை விதிக்க வேண்டுமென்கிற பொலிஸாரின் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கொழும்புப் புறக்கோட்டைப் பொலிஸார் நேற்று (25) அளுத்கடை நீதவான் நீதிமன்றில் இக்கோரிக்கை முன்வைத்திருந்த நிலையில், பொலிஸாரின் கோரிக்கையை நீதவான் நிராகரித்திருந்தார்.

மேலும், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தை இலக்கு வைத்து சாதாரணப் பொதுமக்களின் போக்குவரத்துக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் பொலிஸாரால் கொழும்பில் நேற்று முன்தினம் (24) ஏற்படுத்தப்பட்டிருந்த வீதித்தடைகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக போராட்டக்காரர்களை தடுக்கும் வகையில் பொலிஸாரால் அமைக்கப்பட்டிருந்த முற் கம்பிகளால் ஆன தடைகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

மேலும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய மாணவத் தலைவர்களின் வீடுகளுக்கு சென்றுப் பொலிஸார் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 120 ஐ பெற்றுவிட்டோம்

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதற்காக ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, சுயாதீனமாக இயங்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்த முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் என மொத்தமாக 120 பாராளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பார்கள் எனவும் கூறியுள்ளார்.

அவரது கட்சியின் தலைமையகத்தில் நேற்று (25) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், அரசாங்கத்துக்கு எதிராக மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொள்ளும் வரையில் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர வேண்டாம். மூன்றிலிரண்டு பெரும்பான்மை இல்லாது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரும் பட்சத்தில் அது அரசாங்கத்துக்கு நம்பிக்கையளிக்கும் பிரேரணையாக மாறிவிடும் என்பதை சுட்டிக்காட்டி, மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பெரும்வரையில் கொஞ்சம் பொறுமைக் காக்குமாறு நாம் ஐக்கிய மக்கள் சக்தியிடம் கேட்டுக்கொண்டோம் என்றார்.

தற்போது அரசாங்கத்துக்கு எதிராக 113 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அப்பால் 120 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எதிர்க்கட்சியில் 65 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்கள் 42 பேர் இருந்தோம். அதில் மூவர் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டு மீண்டும் அரசாங்கத்துடன் இணைந்துக்கொண்டதால் தற்போது எமது அணியில் 39 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்களோடு எதிர்க்கட்சியையும் சேர்த்தால் 104 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்றார்.

சர்வக்கட்சி இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காக தற்போதைய அரசாங்கம் பதவி விலக வேண்டும் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த 10 பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுத்துமூலமாக அறிவித்திருந்தனர். 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவளித்த எதிர்க்கட்சியை சேர்ந்த மூன்று முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்துக்கு வழங்கி வந்த ஆதரவை திரும்பப் பெற்றுள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்களான நாலக கொடஹேவா, டலஸ் அழகப்பெரும, சரித ஹேரத் ஆகியோரும் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்காக அரசாங்கம் உடனடியாகப் பதவி விலக வேண்டுமென வெளிப்படையாக அறிவித்துள்ளனர். எனவே அரசாங்கம் பதவி விலக வேண்டுமென்கிற நிலைப்பாட்டில் மொத்தமாக 120 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள் எனவும் கூறினார்.

இதேவேளை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த மேலும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பார்கள் எனவும் கம்மன்பில இதன்போது கூறினார்.

## அரசாங்கம் கவிழும்வரை எதிர்க்கட்சிகள் ஓயாது

மகாசங்கம், தொழில் வல்லுநர்கள், இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட முழு நாடும் தற்போது அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் கண்டியில் இருந்து ஆரம்பமான பேரணியானது பிரதான வீதியூடாக கொழும்பை வந்தடையும் எனவும் குறிப்பிட்டார்.

தற்போது பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டு வரும் நிலையில், அவற்றுக்கு ஆதரவாக எதிர்க்கட்சிகளும் இன்று எதிர்ப்பு பேரணியை நடத்தவுள்ளன என்றார்.

போராட்ட பேரணி அரசியல் சார்பற்றதாக இருக்கும், எனவே அனைத்து குடிமக்களும் அதில் பங்கேற்கலாம் என்ற அவர், எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி பாரிய பேரணி ஒன்றையும் நடத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் பலத்தை வெளிக்காட்டும் வகையில் இந்த எதிர்ப்பு பேரணி முன்னெடுக்கப்படுவதாக தெரிவித்த அவர், தற்போதைய அரசாங்கம் கவிழும் வரை எதிர்க்கட்சிகள் ஓயாது என்றார்.

## ஏப்ரல் 28இல் மாபெரும் தொழிற்சங்க போராட்டம்

தற்போதைய நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் அவலநிலைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஆசிரியர் மற்றும் அதிபர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு கல்வி அமைச்சின் செயலாளரை, நேற்று (25) சந்தித்திருந்தது.

அதன் பின்னர் ஊடகவியாளர்களிடம் பேசிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர், எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்றார்.

சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதால், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என அமைச்சின் செயலாளர் ஆசிரியர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார் எனவும் தெரிவித்தார்.

சம்பள அதிகரிப்பு போதுமானதாக இல்லை எனவும் இது முன்மொழியப்பட்ட அதிகரிப்பில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே என்றும் தெரிவித்த அவர், இருப்பினும் முழு அரச துறையும் இன்னும் எந்த அதிகரிப்பையும் பெறவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார்.

நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக மணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தும் நோக்கில் சுகயீன விடுமுறைப் போராட்டம் நடத்தப்பட்டதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் முன்னெடுக்கும் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில், எதிர்வரும் 27ஆம் திகதி நள்ளிரவு முதல் 28ஆம் திகதி நள்ளிரவு வரை அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க ரயில்வே தொழிற்சங்க கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

ரயில்வே திணைக்களத்தின் முக்கிய தொழிற்சங்கங்கள் உட்பட 30க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இந்த வேலை நிறுத்தத்தில் முன்னெடுக்கவுள்ளதாக அறியமுடிகிறது.

## அமெரிக்கா முன்னுரிமை வழங்கும்

இந்நிலையில், நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு சென்றிருந்த தூதுவர் ஜூலி சங், நல்லூர் கந்தன் ஆலயமானது மத பன்முகத்தன்மையை வெளிப்படுத்தவும் இலங்கையின் மிகவும் சிறப்புமிக்க அடையாளம் என்பதையும், மத சுதந்திரம் மற்றும் சகல மக்களையும் உள்ளடக்கிய வளமான இலங்கையை கட்டியெழுப்ப அமெரிக்கா உறுதிபூண்டுள்ளதாகவும் தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவேற்றியுள்ளார்.

அத்துடன் நேற்று காலையில் யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்டீன் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். குறித்த சந்திப்பில் யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமைகள் மற்றும் சமகால நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜானை சந்தித்திருந்த அமெரிக்க தூதுவர் ஜூலி சங், இலங்கை முழுவதும் நிலையான முதலீட்டை ஈர்ப்பதற்கும் ,பொருளாதார வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்கும் அமெரிக்கா முன்னுரிமை வழங்கும் எனவும், இன்றைய பொருளாதார சவால்கள், வடமாகாணத்தின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு எவ்வாறு தொடர்ந்து ஆதரவளிப்பது என்பது குறித்தும் தாம் கலந்துரையாடியதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் சிவில் சமூகத் தலைவர்களை சந்தித்திருந்த அவர், வடக்கின் நிலைமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாடுகளுக்கு கொடுக்கவேண்டிய முக்கியத்துவம் குறித்தும் கலந்துரை யாடியிருந்ததுடன், நேற்று இரவு தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தார் என்பதையும் குறிப்பிடத்தக்கது.

## எனது வாயை அடைக்க முயற்சிக்கவில்லை

பாராளுமன்ற பிரதி சபாநாயகர் பதவிக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனை நியமிக்க பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில் அது குறித்து தமிழ் மிரருக்கு தெரிவிக்கும் போதே இதனை குறிப்பிட்டார்,

ஊடகங்களில் அவ்வாறான செய்திகள் வெளிவருகின்றன. ஆனால் பிரதி சபாநாயகர் பதவியை எடுப்பதற்கு நான் தயாரில்லை. இவ்வாறு பதவிகளை கொடுத்து எனது வாயை மூட வைக்கலாம் என நினைத்தால் அது ஒருபோதும் நடக்காது. இந்த அரசாங்கம் மக்களின் எதிர்ப்பை சம்பாதித்துக்கொண்டுள்ளது. இவ்வாறான நிலையில் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவி சாய்க்க வேண்டுமே தவிர பதவிகளை எண்ணிப்பார்க்கக்கூடாது. பாராளுமன்ற பிரதி சபாநாயகர் பதவியை மட்டுமல்ல எந்தவொரு பதவியையும் பெற்றுக்கொள்ள நான் தயாரில்லை என்றார்.

## பதவியில் இருந்து விலகுவதாக
### பிரதமர் அறிவிக்கைவில்லை

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி உறுப்பினர்கள், சுயேச்சை எம்.பிக்கள் மற்றும் மத குழுக்களுடன் கலந்துரையாடிய பிரதமர், இன்னும் 100க்கும் அதிகமான ஆசனங்களை சபையில் வைத்துள்ளதால் தனது இராஜினாமா குறித்து கலந்துரையாடியிருக்கவில்லை எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு 120 எம். பி.க்கள் ஆதரவளிப்பதாக நேற்று காலை ஊடகங்களுக்கு தெரிவித்த உதய கம்மன்பிலவின் கருத்துக்கு பதிலளித்த போதே, பிரதமர் அலுவலக சிரேஷ்ட அதிகாரிகள் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தனர்.

பிரதமர்களின் அதிகாரங்களை அநாவசியமாகப் பயன்படுத்தும் சில குழுக்கள் அவரை பதவி விலக விடாமல் தடுப்பதாகவும், அவ்வாறு செயற்படுமாயின் அந்த நபர்களின் பெயர்களை தான் வெளியிடுவேன் எனவும் கம்மன்பில தெரிவித்திருந்தார்.

இந்த கூற்றுக்கள் பொய்யானவை என்றும், எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை தவறாக வழிநடத்த கம்மன்பில மேற்கொண்ட முயற்சி என்றும் பிரதமர் அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கப்ராலுக்கு வெளிநாடு செல்லத்தடை

## கொழும்பு நீதவானை அடுத்து கோட்டை நீதவானும் உத்தரவு

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதித்து நேற்று (25) உத்தரவிட்ட கோட்டை நீதவான் நீதிமன்ற நீதவான் திலின கமகே, எதிர்வரும் ஜூன் மாதம் 7ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பித்தார்.

இலங்கை அரசாங்கத்துக்குச் சொந்தமான 65 மில்லியன் அமெரிக்க டொலரை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பிலேயே மேற்குறிப்பிட்ட உத்தரவை நீதவான் பிறப்பித்தார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 136(1)(a) பிரிவின் பிரகாரம், நுகேகொட நலங்காராமதிபதி தினியாவல பாலித தேரர் தனிப்பட்ட முறைப்பாட்டின் மூலம் தாக்கல் செய்துள்ளார்.

2014ஆம் ஆண்டு அஜித் நிவார்ட் கப்ரால் மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றிய போது இலங்கை அரசாங்கம், அமெரிக்காவின் சிஐஏ நிறுவனத்தின் ஆதரவாளரான இமாத் ஷா சுபேரி என்ற அமெரிக்க வர்த்தகருக்கு மத்திய வங்கியின் ஊடாக 6.5 மில்லியன் அமெரிக்க டொலரை செலுத்தியதாக மனுதாரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், அரசியலமைப்பின் 150ஆவது சரத்தை மீறி, பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவையின் முன் அனுமதியின்றி 6.5 மில்லியன் அமெரிக்க டொலரை செலுத்தியுள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷ ஆஜராகியிருந்தார்.

இதேவேளை, முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடை உத்தரவை, மே மாதம் 2 ஆம் திகதி வரை நீட்டிக்குமாறும் அவருக்கு அழைப்பாணை பிறப்பிக்குமாறும், கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுனாவல, கடந்த 18ஆம் திகதி கட்டளையிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும்

## பெஃப்ரல் வலியுறுத்து

அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என பெஃப்ரல் அமைப்பு வலியுறுத்துவதாக அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகளுக்கு அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமென்கிற யோசனையையே நாம் முன்வைக்கிறோம். தனி ஓர் அரசியல் கட்சிக்கு எவ்வளவுப் பெரிய பெரும்பான்மை இருந்தாலும் பரவாயில்லை. அந்தப் பெரும்பான்மையை வைத்துக்கொண்டு, நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முடியாது.

நாட்டில் மீண்டும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்ட அரசாங்கம் நிரூபிக்கப்பட்டாலும் தற்போது முகங்கொடுக்கும் இதே பிரச்சினைகள் மீண்டும் ஏற்படும். 19ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளை சரி செய்து கொண்டு, அதனை மீள அமல்படுத்த வேண்டுமென்றே நாம் யோசனையை முன்வைக்கிறோம். அரசாங்கம் மாறினாலும் நாட்டில் பொதுவான தேசிய கொள்கை ஒன்று காணப்பட வேண்டும்.

எம்.பிக்கள் அனைவரும் மக்களின் குரலுக்கு செவி சாய்க்க வேண்டும். இல்லை என்றால் அடுத்தத் தேர்தலின் ஊடாக அவர்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட மாட்டார்கள் எனவும் கூறினார்.



# கனியவளங்கள் தொடர்பில் கவனம்

இலங்கையின் கனியவளங்கள் தொடர்பான தேசிய கொள்கையை வகுப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் தொடர்பில், அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப் குழு) கவனம் செலுத்தியுள்ளது.

புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் 2018-2019 நிதியாண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் குறித்த பணியகத்தின் தற்போதைய செயற்றிறன் தொடர்பில் கோப் குழு அதன் தலைவர் சரித ஹேரத் தலைமையில் கூடிய ஆராய்ந்துள்ளது.



கனியவளங்கள் தொடர்பில் தேசிய கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கான அனுமதி 2017ஆம் ஆண்டு அமைச்சரவையால் வழங்கப்பட்டு உள்ளபோதும், இதுவரை தேசிய கொள்கை தயாரிக்கப்படாமை கவலைக்குரியது என கோப் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் இதன்போது தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கால அட்டவணையொன்றை அமைத்து, ஆறு மாத காலத்துக்குள் தேசிய கொள்கையைத் தயாரிக்க முடியுமா என இதன்போது சரித ஹேரத் கேள்வி எழுப்பியிருந்த நிலையில், அதனை ஐந்து மாதங்களுக்குள் தயாரிக்க முடியும் என வருகைத்தந்திருந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

> கனியவளங்கள் தொடர்பில் தேசிய கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கான அனுமதி 2017ஆம் ஆண்டு அமைச்சரவையால் வழங்கப்பட்டு உள்ளபோதும், இதுவரை தேசிய கொள்கை தயாரிக்கப்படாமை கவலைக்குரியது

கனியவளங்கள் தொடர்பில் தேசிய கொள்கையொன்றைத் தயாரித்திருந்தால், நாட்டில் அந்நியச் செலாவணிப் பிரச்சினை ஏற்பட்டுள்ள சூழலில் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்திருக்குமெனவும் சரித ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார்.

# முட்டையின் விலை 50ஐ தாண்டும்



எதிர்காலத்தில் மூட்டை ஒன்றின் விலை 50 ரூபாயை விட அதிகரிக்கலாமென தெரிவிக்கும் அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க, இதனை தடுக்க முடியாதெனவும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

முட்டை உற்பத்தியின்போது, கோழி உணவுக்கு தேவையான இரசாயனங்களில் வெறும் 3 இரசாயனங்களே உள்நாட்டில் காணப்படுகிறது. ஏனைய 11 இரசாயனங்களும் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனால் பண்ணையாளர்களுக்கு நட்டம் ஏற்படுகின்றது. .

வீடுகளில் முட்டை ஒன்றை உற்பத்தி செய்வதற்காக 26 ரூபாய் செலவிடப்படுகிறது. கிராமிய விவசாயிகள் முட்டை ஒன்றுக்காக 31 ரூபாயை செலவிடுகிறார்கள். எனினும் 20 - 21 ரூபாயை செலுத்தியே விவசாயிகளிடமிருந்து முட்டையைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் பிரச்சினை காரணமாக கோழிகளின் உணவுகளின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளன. இது தொடர்பில் உரிய தரப்பினர் விரைவாக அவதானம் செலுத்த வேண்டும் எனவும் கூறினார்.



# விமானங்களை குத்தகைக்கு எடுக்க வேண்டாம்

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தால் விமானங்களைக் குத்தகைக்கு எடுக்கும் செயற்பாடுகளை மூன்று மாதங்களுக்கு ஒத்திவைக்குமாறு கோப் குழு பரிந்துரைத்துள்ளது.

2022-2025 காலப் பகுதியில் 21 விமானங்களை குத்தகைக்கு எடுத்துக்கொள்வதற்கு ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் தீர்மானித்திருந்தது. தற்பொழுது காணப்படும் பொருளாதார நிலைமையின் கீழ், இது தொடர்பில் மறுபரிசீலனை செய்யுமாறும், உரிய கொள்முதல் செயல்முறை உரிய நடைமுறைகளுக்கு இணங்குகிறதா? என்பது பற்றி ஆராயுமாறும் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சின் செயலாளர்களுக்கும் கோப் குழுவின் தலைவர் சரித ஹேரத் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொள்முதல் வழிகாட்டலை உரிய முறையில் தயாரித்தல் மற்றும் சம்பந்தப்பட்ட கொள்முதல் செயன்முறையை அமைச்சரின் ஊடாக அமைச்சரவைக்கு சமர்ப்பித்து அதனை அமைச்சரவை முடிவாக முன்னெடுக்குமாறும் பரிந்துரைத்துள்ளார்.

விமானங்களின் சேவைக்காலம் முடிவடைந்ததும் அவற்றுக்காக விமானங்களை மாற்றீடு செய்தல் விமான சேவையை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு அவசியமான நடைமுறை என்பதை ஏற்றுக்கொள்ள முடியும். ஆனாலும் நாட்டில் நெருக்கடி நிலைமை காணப்படுவதால் இது குறித்து அதிக கவனம் செலுத்தி உரிய தேவைகளைப் பூர்த்தி செய்வது முக்கியம் என்றும் சுட்டிக்காட்டினார்.

# பாடசாலைகளைத் தொடர்ந்து மூடிவைக்க முடியாது



பல்வேறு காரணங்களால் பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகள் பின்நோக்கிக் காணப்படுவதாகத் தெரிவிக்கும் புதிய கல்வி அமைச்சர் ரமேஸ் பத்திரன, எனவே பாடசாலைகளை தொடர்ந்து மூடி வைத்திருக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

அதிபர், ஆசிரியர்களின் சுகவீனப் போராட்டம் தொடர்பிலும் கருத்துத் தெரிவித்துள்ள ரமேஸ் பத்திரன, அதிபர், ஆசிரியர்கள் சுகவீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தாலும் பாடசாலைக்கு வருகைத் தந்திருந்த ஆசிரியர், அதிபர்களைக் கொண்டு கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றே நாம் அறிவுறுத்தியிருந்தோம்.

அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான உரிமைகள் காணப்படுகிறது. ஆனால், கொரோனா வைரஸ் உள்ளிட்டக் காரணங்களால் பாடசாலைகளில் கல்விச் செயற்பாடுகள் பாரியளவில் பின்நோக்கிக் காணப்படுகின்றன. எனவே தொடர்ந்தும் பாடசாலைகளை மூடிவைக்க முடியாது எனவும் கூறினார்.

# மஹிந்த, கோட்டாவுக்கு எதிராக வைத்தியர்களும் போர்க்கொடி



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தங்களது பதவிகளில் இருந்து விலக வேண்டுமென விசேட வைத்திய நிபுணர்களின் சங்கம் அறிவித்துள்ளது.

விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் முன்வைத்த கோரிக்கையை ஏற்று, இத்தீர்மானத்தை அச்சங்கம் எடுத்துள்ளதாக அதன் தலைவர் விசேட வைத்திய நிபுணர் லக்குமார் பெர்ணான்டோ தெரிவித்தார்.

விசேட வைத்திய நிபுணர்களின் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் மேற்படி தீர்மானம் எட்டப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# லிற்றோ நிறுவனம் விடுத்துள்ள அறிவிப்பு




இன்று நாட்டை வந்தடைய உள்ள 3,200 மெட்ரிக் தொன் சமையல் எரிவாயு நாளைய தினம் விநியோகிக்கப்படும் என லிற்றோ நிறுவனம் அறிவித்துள்ளது.

அடுத்த வாரம் 7 ஆயிரத்து 200 மெட்ரிக் தொன் எரிவாயு இறக்குமதி செய்யப்பட உள்ளது. இதில் 3,200 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிக்கொண்டு இன்று (26) நாட்டுக்குக் கப்பல் ஒன்று வரவுள்ளதோடு, நாளைய தினம் சமையல் எரிவாயு விநியோகிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் எனவும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை எரிவாயுவை ஏற்றிக்கொண்டு 28ஆம் திகதி மற்றொரு கப்பல் நாட்டை வந்தடையும் எனவும் லிற்றோ நிறுவனம் அறிவித்துள்ளது.

## "நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றுவதற்குத் தேவையான எம்.பிக்கள் கிடைத்துவிட்டனர்"



அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை பாராளுமன்றில் நிறைவேற்றிக்கொள்வதற்கு தேவையான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தமக்குக் கிடைத்துவிட்டதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாகச் செயற்படுவதாக அறிவித்துள்ள 41 பாராளுமன்ற உறுப்பினர்களும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்க உள்ளதாகவும், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுவதாகவும் கூறினார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை கையளிப்பது, கையளித்தப் பின்னர் ஏற்படும் நிலைமைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குப் பல அரசியல் கட்சிகள் ஆதரவளிக்க இணங்கியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள்
தமிழ்Mirror
பதிவு செய்வதற்கு
Dialog Type TM and send to 87798
Daily Rs.1/=+TAX
HUTCH Type TM and send to 2233
Monthly Rs.30/=+ TAX
SLTMOBITEL Type REG TM and send to 77012
Daily Rs.1/=+TAX

அதிபர்கள், ஆசிரியர்களின் சுகவீன போராட்டத்தால் வடக்கு, கிழக்கில்

# கல்வி நடவடிக்கைகள் முற்றாகப் பாதிப்பு





வா.கிருஸ்ணா, க. அகரன், வி.சுகிர்தகுமார்

நாடளாவிய ரீதியில் அதிபர்கள், ஆசிரியர்கள் முன்னெடுத்துவரும் சுகவீன விடுமுறை போராட்டம் காரணமாக, வடக்கு, கிழக்கில் உள்ள பாடசாலைகளில் பயிலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டன.

வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் கிழக்கில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் உள்ள சகல பாடசாலைகளிலும் இந்தச் சுகவீன விடுமுறை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதனால், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் முழுமையாக பாதிக்கப்பட்டிருந்தன.

நாட்டில் நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு உடனடி தீர்வைக் கோரி, அரச பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள், நேற்று (25) பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இலங்கை ஆசிரியர் சங்கம், ஒன்றிணைந்த அதிபர்கள் சங்கம், ஆசிரிய ஆலோசகர்கள் சங்கம் உட்பட பல ஆசிரியர் சங்கங்கள் இணைந்து விடுத்தகோரிக்கைக்கு அமைவாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்தன.

ஆசிரியர்களின் வரவு குறைவாக இருந்த காரணத்தால், மாணவர்கள் திரும்பி வீட்டுக்குச் சென்றதையும் காணமுடிந்ததுடன் சில பாடசாலைகளில் உயர்தரப்பிரிவுகளின் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதையும் காணமுடிந்தது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து, நாடளாவிய ரீதியில் பல்வேறு விதமான போராட்டங்களில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். இப்போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் வகையிலும் இந்த அரசாங்கம் மக்களின் போராட்டங்களுக்கு செவிசாய்த்து மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தும் ஆசிரியர், அதிபர் சங்கங்களால் இந்தச் சுகவீன விடுமுறைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தின் அனைத்து பாடசாலைகளிலும் ஆசிரியர்களின் வருகை மிகவும் குறைவாக இருந்ததோடு மாணவர்களின் வருகையும் மந்தகதியில் இருந்தமையை காணக்கூடியதாக இருந்தது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலை உயர்வு, அரசாங்கத்திற்கு எதிராகவுமே, ஆசிரியர்கள் இந்த சுகவீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சுகவீன விடுமுறையை அறிவிப்பதற்காக, ஆசிரியர்கள் தபால் நிலையங்களில் நீண்ட வரிசைகளில் நின்றிருந்தமையை காணக்கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து தனுஷ்கோடிக்கு

# அகதிகளாக 15 பேர் சென்றனர்

ரொசேரியன் லெம்பட், நிதர்சன் வினோத்



இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக, மக்கள் உணவு, அத்தியாவசிய தேவைகளுக்காக கடும் சிரமத்துக்கு ஆளாகி வருகின்றனர்.

இதனால், இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்ற 60 தமிழர்கள், மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், நேற்று (25) திங்கட்கிழமை அதிகாலை வேளையில் 9 மாத கைக் குழந்தை உட்பட 5 குடும்பங்களைச் சேர்ந்த மேலும் 15 பேர் அகதிகளாக தனுஷ்கோடியை சென்றடைந்துள்ளனர்.

தனுஷ்கோடி, இலங்கைக்கு அருகே உள்ளதால், இலங்கை நிகழ்ந்த இறுதிக்கட்ட போரின் போது, தமிழர்கள் தங்கள் உயிர்களை காப்பாற்றி கொள்ள, அகதிகளாக தனுஷ்கோடி வழியாக தமிழகத்திற்கு வந்து, இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் தங்கினர்.

அதேபோல், தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக, உணவு, அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் உணவுப் பஞ்சம் ஏற்பட்டு, உயிரிழப்பு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தில், இலங்கை தமிழர்கள் இந்திய - இலங்கை சர்வதேச கடல் எல்லையில் உள்ள தீவிர கண்காணிப்பையும் மீறி, படகுகளில் தனுஷ்கோடிக்கு அகதிகளாக தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

யாழ்ப்பாணம், நெடுந்தீவு கடற்கரையில் இருந்து படகொன்றில், யாழ்ப்பாணம், ஆணைக்கோட்டை, காக்காதீவை சேர்ந்த 5 குடும்பங்களைச் சேர்ந்த 15 பேர் நேற்று (25) திங்கட்கிழமை அதிகாலை 3 மணியளவில் தனுஷ்கோடியை அடுத்த கோதண்டராமர் கோவில் கடற்கரையில் வந்திறங்கினர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற ராமேஸ்வரம் மரைன் பொலிஸார், அவர்களை மீட்டு, மண்டபம் மரைன் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக, கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி முதல் நேற்று (25) வரையிலும் இலங்கை தமிழர்கள் 75 பேர் அகதிகளாக தமிழகம் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கோட்டாபய அரசாங்கம்

# அட்டையை போன்றது



அட்டைகள் எவ்வாறு மனிதனிலிருந்து இரத்தத்தினை உறுஞ்சுமோ அதுபோன்று நாட்டு மக்களை உறிஞ்சும் செயற்பாட்டினை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் முன்னெடுத்துள்ளது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பாலமீன்மடு, லைட்ஹவுஸ் இளைஞர் கழகத்தின் 26வது நிறைவை முன்னிட்டு 'முகத்துார் முழக்கம்' எனும் மாபெரும் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியை பாலமீன்மடு லைட்ஹவுஸ் விளையாட்டு மைதானத்தில் நடத்தியது.

30 இளைஞர் கழகங்கள் பங்குகொண்ட இந்த சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நாட்டு மக்களின் நிதியை களவெடுத்து, நாட்டு மக்களுக்கு சொந்தமான வளங்களை விற்பனை செய்து, இந்த நாட்டு மக்களுக்கு சொந்தமான அந்நிய செலாவாணியை கொண்டு நாடுகளின் கடனை செலுத்துவதாக கூறி தனது குடும்பத்தின் கடன்களை அடைக்கும் செயற்பாடுகளை ராஜபக்ஷ அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த நாட்டில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வரும்போது கையிருப்பாக இந்த நாட்டில் 06 பில்லியன் அமெரிக்க டொலர் இருந்துள்ளது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி வரப்போகின்றது, பொருட்களுக்கான தட்டுப்பாடு வரப்போகின்றது என்று தெரிந்தும் இந்த அந்நிய செலவாணியை பயன்படுத்தி அந்தக் கடனை அடைப்பதற்கான காரணம், அவரின் குடும்பத்தின் வேண்டப்பட்டவருக்கே அந்த நிதியை வழங்கியதான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றது என்றார்.

## பாரவூர்தி மோதியதில் பழைமையான மரம் சாய்ந்தது



ரீ.எல்.ஜவ்பர்கான்

பழைமை வாய்ந்த மரம் மீது பாரவூர்தி மோதியதில் அந்த மரம் முறிந்து நடுவீதியிலேயே விழுந்தமையால், அந்த வீதியின் ஊடான போக்குவரத்து இரு மணிநேரம் பாதிக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு- கல்முனை பிரதான வீதியில் தாளங்குடா சந்தியில் நேற்றுக் (25) காலை, இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து மரத்தை அறுத்து வீதிப்போக்குவரத்தை சீர்செய்தனர்.

குறித்த பிரதேசத்தில் மரம் விழுந்தமையால் மின் விநியோகமும் துண்டிக்கப்பட்டுள்ளது.

சுமார் 30 வருடங்கள் பழைமை வாய்ந்த இம்மரம் பிரதேசத்தின் அடையாளமாகக் காணப்பட்டதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

## வீதிரோந்து

பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் முப்படை மற்றும் பொலிஸாருடன் இணைந்து விசேட அதிரடிப்படையினர் வீதி ரோந்து, சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கமைய நேற்று (25) மருதமுனை, பெரிய நீலாவணை, கல்முனை, சம்மாந்துறை, சவளக்கடை மத்திய முகாம் உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறு ரோந்து நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக அதிகரித்துள்ள குற்றச்செயல்களை கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

## தூதுவர் ஜூலி சுங் யாழில் பல்வேறு தரப்பினருடன் சந்திப்பு



நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணத்துக்கு ஞாயிற்றுக்கிழமை (24) விஜயம் செய்த இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சுங், சிவில் சமூக தலைவர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அமெரிக்க தூதர், கொக்குவிலில் உள்ள தனியார் விடுதியொன்றில் தங்கியுள்ளார். அங்கே, இந்தச் சந்திப்புகள் இடம்பெற்றுள்ளன.

இந்தச் சந்திப்பின் போது, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமி, அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் உள்ளிட்ட சிலரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் யாப்பா, யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்டீன் பெர்னாட் ஞானப்பிரகாஷம் ஆண்டகை ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

குறித்த சந்திப்பில் யாழ்ப்பாணத்திலுள்ள தற்போதைய நிலைமைகள், சமகாலப் போக்குகள் குறித்து கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்புகள் தொடர்பாக கருத்து தெரிவித்த அமெரிக்க தூதர், "எந்தவொரு ஜனநாயகத்திலும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் உரிமைகளுக்காக வாதிடுவதில், சிவில் சமூகம் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. இன்றைய அரசியல் மற்றும் பொருளாதார சவால்கள் குறித்து விவாதிப்பதற்கும் ஜனநாயக இலங்கைக்கான எமது ஆதரவை மீண்டும் வலியுறுத்துவதற்கும் யாழ்ப்பாணத்தில் சிவில் சமூகத் தலைவர்களைச் சந்தித்தேன்" என்றார்.



## புகையிலை அறுவடை மும்முரம்

எஸ். தில்லைநாதன்

வடமராட்சி, வலிகாமம் பிரதேசங்களில் பயிரிடப்பட்ட புகையிலையை அறுவடை செய்வதில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

புகையிலைக் செடி ஒன்று 350 ரூபாய் தொடக்கம் 450 ரூபாய் வரையில் வடமராட்சிப் பிரதேசத்திலும் 250 ரூபாய் தொடக்கம் 350 ரூபாய் வரையில் வலிகாமம் பிரதேசத்தில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

உலர்த்தி, பதனிட்டு கொள்வனவு செய்யப்படும் புகையிலையின் தரத்துக்கு ஏற்ப விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டு வருவதாக புகையிலை வியாபாரிகள் தெரிவித்தனர். அறுவடை செய்யப்பட்டு வரும் புகையிலையை இரு பிரதேசங்களிலிருந்து வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த வியாபாரிகளே மிகக் கூடுதலாக கொள்வனவு செய்து வருகின்றனர். ஒரு சில விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த புகையிலையைத் தாங்களே உலர்த்தி பதனிட்டு வருகின்றனர்.

ஜனநாயக போராட்டத்துக்கு

## அரச உத்தியோகத்தர்கள் முன்வந்து உதவ வேண்டும்

எப்.முபாரக்

பொருட்களின் விலையேற்றம், வாழ்க்கைச் செலவு உயர்வு என்பவ ற்றைக் கண்டித்து பொதுமக்களின் ஜனநாயக ரீதியான போராட்டங்களுக்கு சகல அரச உத்தியோகத்தர்களும் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டுமென திருமலை மாவட்ட எம்.பி இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாக, நாட்டின் பொருளாதாரம் சின்னா பின்னமாகியுள்ளது.

இந்தப் பொருளாதார சீரழிவால் அரச உத்தியோகத்தர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். தினமும் விலை உயர்கின்ற அளவுக்கு அவர்களது சம்பளம் உயரவில்லை.

இது குறித்து தொழிற்சங்கங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## மூலிகைத் தோட்டம் அமைக்க ஏற்பாடு

எம்.எஸ்.எம். ஹனீபா

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் சுதேச வைத்தியத்துறையை அபிவிருத்தி செய்யும் முகமாக மூலிகைத் தோட்டம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸ், திங்கட்கிழமை (25) தெரிவித்தார்.

நாட்டில் சுதேச வைத்தியத்துறையை மேம்படுத்தும் முகமாகவும், அதனை மக்கள் விரும்பி பயன்படுத்தக் கூடிய முறையிலும் பொது மக்களுக்கு அறிவூட்டுவதோடு சுதேச வைத்தியத்துறையை முன்னேற்ற கரமாக எடுத்துச் செல்லவுள்ளதாகவும் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள ஒவ்வோர் ஆயுர்வேத வைத்தியசாலையிலும் பொது மக்களுக்கு தேவையான மூலிகைகளை நடுகை செய்து, அவற்றை மக்களுக்கு அறிமுகம் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.









# “சவுக்கடி கொடுப்போம்”



சர்வாதிகார ஆட்சிக்கு சவுக்கடி கொடுக்கும் நோக்கத்துடனேயே கண்டியிலிருந்து தலைநகருக்கு பாதையாத்திரை பேரணி நடத்தப்பட உள்ளதென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

பதுளையில் நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நாட்டுக்கு அந்நிய செலாவணி அதிகமாக ஈட்டித் தந்த பெருமை பெருந்தோட்ட மலையக மக்களையே சாரும். இருந்த போதிலும் கூட அதிகளவில் பொருளாதார நெருக்கடிக்கு பெருந்தோட்ட மக்களே முகங்கொடுக்கின்றனர்.

மலையக மக்களும் வீதிக்கு இறங்கி போராட்டங்களில் ஈடுபட்டு கொண்டிருக்கின்றனர். ‘எல்போர்ட்’ அமைச்சர்களையும் தொலைநோக்கு சிந்தனை இல்லாத, தீர்க்கமான முடிவுகளை எடுக்கமுடியாத நிலையில், நாட்டை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல முடியாது என்றார்.

நாட்டில் தற்சமயம் ஏற்பட்டுள்ள மிலேச்சத்தனமான செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படல் வேண்டும்.

அதற்காகவே கண்டியிலிருந்து இன்று (26) பாதயாத்திரை ஆரம்பிக்கப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாதையாத்திரை உழைக்கும் வர்க்கத்தை வலுப்படுத்தும் நோக்கில் மே 1ஆம் திகதி தலைநகரை வந்தடையும். அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து, அடையாள வேலைநிறுத்த போராட்டத்தை எதிர்வரும் 28ஆம் திகதி மேற்கொள்ள இருக்கிறன. இதற்கும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தன்னுடைய முழுமையான ஆதரவை வழங்கும் என்றார்.

## தட்டுப்பாட்டால் தவிக்கும் மக்கள்

சுதத் எச்.எம். ஹேவா

ஹட்டன் பிரதேசத்தில் நிலவுகின்ற காஸ், மண்ணெண்ணெய் ஆகியவற்றுக்கான தட்டுப்பாடு, நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக, நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இவ்விரு பொருட்களை மட்டுமே கொள்வனவு செய்வதற்காக. ஒவ்வொருநாளும் நகருக்கு சென்று, வெறுங்கையுடன் திரும்பி வருவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமன்றி, அன்றாடம் பயன்படுத்தப்படும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடும் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. இந்த நிலைமை நீடிக்குமாயின், வேலைகளுக்குச் செல்லாது, பொருட்களுக்காக நகரங்களிலேயே காத்துக்கிடக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை தங்களுக்கு ஏற்படும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## சட்டவிரோத அங்காடி அகற்றப்பட்டது

ரஞ்சித் ராஜபக்ஷ

ஹட்டன் நகரில் பஸ் தரிப்பிடத்துக்கு அண்மையில், பாதசாரிகள் நடைபாதையை மறித்து, இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில், ஞாயிற்றுக்கிழமை (24) இரவு நிர்மாணிக்கப்பட்ட சட்டவிரோத அங்காடி, நேற்று (25) அகற்றப்பட்டது.

ஹட்டன்-டிக்கோயா நகர சபையின் அதிகாரிகளின் தீர்மானத்துக்கு அமைவாகவே அந்த அங்காடி அகற்றப்பட்டது.

பாதணிகளைத் திருத்துபவர், நடைபாதைக்கு அண்மையில், கடந்த பல வருடங்களாக, வாழ்க்கையை கொண்டுநடத்துவதற்காக, அவ்விடத்தில் சிறிய கூடாரம் அமைத்து தொழில் செய்துவந்தார்.

அந்நபர், ஹட்டன்-டிக்கோயா நகர சபையில் எவ்விதமான அனுமதியையும் பெற்றுக்கொள்ளாது, நடைபாதைக்கு இடையூறு விளைவிக்கும் வகையில், கட்டடமொன்றை, ஞாயிற்றுக்கிழமை (24) நிர்மாணித்துள்ளார். இதனையடுத்தே அந்தக் கட்டடம் அகற்றப்பட்டது.

எனினும், புதிதாக எவ்விதமான கட்டடத்தையும் தான் நிர்மாணிக்கவில்லை எனத் தெரிவித்த பாதணிகளைத் திருத்தும் நபர், தவிசாளரின் அனுமதியுடன் அந்த தற்காலிக கூடாரத்தை புனரமைத்ததாக கூறினார்.






## தந்தியடிக்கும் ஆசிரியர்கள் திரும்பிச்செல்லும் மாணவர்கள்

அரசாங்கத்துக்கு எதிராகவும், விலைவாசி அதிகரிப்பைக் கண்டித்தும், நாடளாவிய ரீதியில் அதிபர்கள், ஆசிரியர்கள் சுகவீன விடுமுறை போராட்டத்தை நேற்று (25) முன்னெடுத்திருந்தனர். இந்தப் போராட்டத்தை அறிந்திராத மாணவர்கள் பலர், பாடசாலைக்கு வந்து, இடைநடுவிலேயே திரும்பிச் சென்றுவிட்டனர். இன்னும் சிலர், பாடசாலைக்குச் சென்று, சுத்தம் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில், தங்களுடைய சுகவீன விடுமுறையை அறிவிக்க, தபால்கந்தோர்களில் தந்தியடிப்பதற்காக, அதிபர்கள், ஆசிரியர்கள் காத்திருந்தனர்.

(படங்கள்: மலையக நிருபர்கள்)













## மாணவி துஷ்பிரயோகம் முன்னாள் சிப்பாய் கைது

சுமணசிறி குணதிலக்க

குடாஓயா பொலிஸ் பிரிவில், நெலுல்ல பகுதியில் வசித்துவரும் 15 வயதான மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ், இராணுவத்தில் சேவையாற்றிய முன்னாள் சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

30 வயதான இவர், குடாஓயா பொலிஸாரால், நேற்றுமுன்தினம் (24) கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த மாணவியுடன் காதல் வயப்பட்டுள்ளார். மாணவி வீட்டில் தனிமையில் இருந்த நேரத்தில் அங்கு சென்ற, காதலனான முன்னாள் சிப்பாய், சிறுமியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

சம்பவம் தொடர்பில், சிறுமி தனது தாயிடம் தெரிவித்துள்ளார். தாய் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, சிறுமி வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர், வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## மாத்தளை கிளை

தற்போதைய அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கும், ‘கோட்டா கோ ஹோம்’ என்பதற்கும் மாத்தளையில் ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தளையில், ‘கோட்டா கோ ஹோம்’ கிளை உருவாக்கப்பட்டுள்ளது. இளைஞர்கள் இணைந்து தன்னிச்சையாகவே இந்த கிளையை உருவாக்கியுள்ளனர். நேற்றைய (25) ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளானவர்கள் பங்கேற்றனர்.



## காத்திருந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்

மெய்யன்



பலமாதங்கள் மண்ணெண்ணெய் இன்றி பரிதவித்த மக்கள் மண்ணெண்ணெய் கொண்டு வரப்பட்டும் பயன் கிடைக்காமல் வெறுங்கையோடு, சோகத்தோடு திரும்பிச் சென்றுள்ள சம்பவம் பன்விலவில் இடம்பெற்றுள்ளது.

மண்ணெண்ணெய் கொண்டுவரப்பட்டுள்ள செய்தியைக் கேட்டு, மக்கள் நேற்று (25) பன்வில எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு படையெடுத்தனர்.

மண்ணெண்ணெய் வாங்கும் நடவடிக்கையில் மும்முரமாக ஈடுபட்டனர். மண்ணெண்ணெய் இறைக்கும் இயந்திரம் சிறிது நேரம் கழித்து பழுதடைந்துவிட்டது. அதனை திருத்துவதற்கு இயலாமல் போனது. நீண்ட நேரம் காத்திருந்த மக்கள், பின்னர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.



## சிதறுதேங்காய் உடைத்து டயர் எரித்து ஆர்ப்பாட்டம்

துவாரகஷான்

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை மீண்டும் அமல்படுத்தக்கோரியும், 20ஆவது திருத்தத்தை மூட்டைக்கட்டுமாறு வலியுறுத்தியும் லிந்துலையில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரசாங்கத்தை உடனடியாக வெளியேறுமாறு வலியுறுத்திய லிந்துல சென்றெகுலர்ஸ் தோட்ட மக்கள், பாடல்கள் பாடி, பதாகைகளை ஏந்தி, டயர்களை எரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்பாட்டக்காரர்கள், முத்துமாரியம்மன் ஆலயத்தில் இருந்து நேற்றுக்காலை 7 மணியளவில் ஊர்வலமாக வந்து, தோட்ட கொழுந்து மடுவத்திற்கு முன்பாக எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அதில், 150க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

அத்தோடு அரசாங்கம் உடனடியாக வெளியேற வேண்டுமென வலியுறுத்தி, ரோதமுனி ஆலயத்தில் தேங்காய் உடைத்தனர்.

அரசாங்கம் வெளியேறவேண்டும்; பதவிக்காகச் செல்லும் அரசியல்வாதிகள் வெளியில் வரவேண்டும்; அரசாங்கத்தை மக்கள் வேண்டாம் என கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள், அதற்கு மதிப்பளிக்க வேண்டும் என இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கோஷமெழுப்பினர்.

## சவர்க்காரத்துக்கு முண்டியடிப்பு

ஆ.ரமேஸ்.

நுவரெலியா, இராகலை நகரங்களில் இயங்கும் சதொச விற்பணை நிலையங்களில் சவர்க்கார வகைகளே, நேற்று (25) அதிகமாக விற்பனையாகியுள்ளது. அதனை கொள்வனவு செய்து கொள்வதற்காக, மக்கள் முண்டியடித்துக் கொண்டிருந்தனர்.

அதேநேரத்தில் குறித்த சதொச விற்பணை நிலையங்களில் புதிய விலை அதிகரிப்புக்கு முன்பு, பழைய விலையில் ஏற்கெனவே கையிருப்பில் இருந்த சவர்க்கார வகைகள் மற்றும் ஆடைகளைக் கழுவும் சவர்க்கார தூள்கள் அதிகமாக இருந்தமை நுகர்வோருக்கு தெரியவந்துள்ளது.

இதனையடுத்தே, நேற்று (25) காலை முதல் நுகர்வோர், படையெடுத்து சவர்க்காரங்களை பழைய விலையில் அள்ளிச் சென்றுள்ளனர்.

மேலும், சில மாதங்களுக்கு வைத்திருந்து பயன்படுத்தக்கூடிய பற்தூரிகை வகைகள், பற்பசைகள் உள்ளிட்ட அன்றாட பாவனைக்கு உரிய அழகு சாதனப் பொருட்களையும் அதிகளவில் வாங்கி சென்றனர். அவை மட்டுமன்றி, பாடசாலை உபகரணங்கள், அப்பியாச புத்தகங்கள் என பழைய விலைக்கு கிடைக்கும் பொருட்களை வாங்கி சென்றுள்ளனர்.

அதேநேரத்தில் ஐந்து கிலோ கிராம் பொதியிடப்பட்ட அரிசி, உள்ளிட்ட சீனி, பால்மா, பருப்பு, வெங்காயம், தேயிலைத்தூள் அடங்கிய 1,900 ரூபாய் பெறுமதியான ‘நிவாரண பொதி’ களையும் நுகர்வோர் வாங்கிச் சென்றுள்ளனர்.



# பட்டினிச் சாவுக்கு வித்திட்டுவிடாது தடுத்தாற்கொள்ளுங்கள்

‘இல்லாமை’ நாளுக்கு நாள் நீடித்துக்கொண்டே செல்கின்றது. கடைகளும் அங்காடிகளும் வெறுமையின் விளிம்புக்குச் சென்றுகொண்டிருக்கின்றன. பழைய விலைகளில் கிடைப்பதை அள்ளிச்செல்லும் நிலைமைக்குள் மக்கள் தள்ளப்பட்டுவிட்டனர். அந்தளவுக்கு நாளுக்கு நாள், நிமிடத்துக்கு நிமிடம் நிலைமை மோசமாகிக்கொண்டே செல்கின்றது.

விலை அதிகரிப்பு, பொருட்களின் தட்டுப்பாடு, பசி, பட்டினியைத் தாங்கிக்கொள்ள முடியாது, தங்களையும் தங்களுடைய குடும்பத்தினரையும் காப்பாற்றிக்கொள்ளும் வகையில், வடக்கிலிருந்து சட்டவிரோதமான முறையில், ஆபத்தான கடல்வழி பயணத்தை மேற்கொண்டு, இந்தியாவுக்குச் செல்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இவர்களில் முதலாவது குடும்பத்தினர் மார்ச் 22ஆம் திகதி சென்றிருந்தனர். இவ்வாறு, அகதிகளாகச் சென்றிருக்கும் இலங்கை தமிழர்களின் எண்ணிக்கை, நேற்று (25) திங்கட்கிழமையுடன் 75ஆக அதிகரித்துள்ளது.

யுத்தக்காலத்தில் அகதிகளாகச் சென்றனர். இன்றைய சூழ்நிலையில் வாழ வழியின்றி சென்று கொண்டிருக்கின்றனர். இது ஒரு தொடர்கதையாக இருக்கும் என்பதே பலரதும் கணிப்பீடாகும். அந்தளவுக்கு மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். எதற்கெடுத்தாலும் வரிசையில் நிற்கவேண்டியுள்ளது.

இந்நிலையில், “வாழ வழியின்றி வந்தவர்களை அகதிகளாக அறிவிக்காமல், சட்டவிரோத குடியேறிகளாகவே வைத்திருப்பது, பன்னாட்டு அரங்கில் மனித உரிமைகளுக்காக குரல் கொடுத்து வரும் இந்தியா போன்ற நாட்டுக்கு அழகல்ல” என பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்மையை வரவேற்கவேண்டும்.

இலங்கையை பொறுத்தவரையில், ‘பெரியண்ணா’ உறவு முறையிலேயே இந்தியா இருக்கின்றது. நெருக்கடியான காலக்கட்டங்களில் உதவிக்கரம் நீட்டியது. இன்னுமே நீட்டிக்கொண்டுதான் இருக்கின்றது.

இதனிடையே எரிபொருள் பிரச்சினை, நீண்ட வரிசையில் நின்றிருந்தல், குடும்பத்தினருக்கு முறையாக உணவுகளைக் பெற்றுக்கொடுக்க முடியாமை ஆகிய காரணங்களுக்காக பலரும் மரணித்துள்ளனர். எனினும், பட்டினிச்சாவு இதுவரையிலும் இடம்பெறவில்லை. சிலவேளைகளில், பட்டினிச்சாவு மறைக்கப்பட்டிருக்கலாம்.

வெளியில் சொல்லிக்கொள்ளாவிடினும், பலரும் ஒருவேளையேனும் உணவைத் தவிர்த்து வருகின்றனர். இல்லையேல் சாப்பிட்டுவிட்டதைப் போல பாசாங்கு செய்கின்றனர். பலரும் சமாளித்துக் கொண்டிருக்கின்றனர். மக்களுக்கு நல்ல படிப்பினையாக வேண்டுமாயின், இன்னும் துன்பப்பட வேண்டும். அப்போதுதான் வீணாக்குவதை தவிர்ப்பர் என குடும்பத்தலைவர்களும் தேவையில்லாத செலவுகளைக் குறைத்தல், நண்பர்களுக்காக செலவிடுவதை முற்றாக கைவிடவேண்டுமாயின், பட்டினியே படிப்பினையாக அமையுமென குடும்பத் தலைவிகளும் சொல்லிக்கொண்டிருக்கின்றனர்.

வருமானத்தை விஞ்சி செலவு நிற்கிறது. ஏற்கெனவே சேமித்து வைத்ததும் குறைந்துகொண்டே செல்கின்றது. வேலைவாய்ப்பும் குறைவு, சில இடங்களில் அரை சம்பளம் வழங்கப்படுகின்றது. இவ்வாறான நிலையில்தான், மே மாதமளவில் பட்டினிக்கு முகங்கொடுக்க, நாட்டு மக்கள் தயாராக இருக்கவேண்டுமென ரணில் விக்கிரமசிங்க ஆருடம் கூறியுள்ளார்.

அந்த ஆருடத்தை உண்மையாக்கி, பட்டினிச் சாவுக்கு வித்திட்டுவிடாது தடுத்தாற்கொள்வதே சரியான நிர்வாகத் திறனாகும்.




## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

தங்களைத் தாங்களே மெச்சிக்கொள்வதும் பிறரிடம் சொல்லி மகிழ்வதும் வெட்கப்படக் கூடிய மமதையான செயல்களாகும். தங்களது நடவடிக்கைகளை சற்றேனும் உணராமல், கர்வப்படுவதும் கோமாளித்தனமாகும். இதை அநேகர் விருப்பத்துடன் செய்துவருகின்றனர்.

செய்யாத நல்ல செயல்களைச் செய்ததாகக் கூறுவதும் பாவச் செயல். அதிலும் அரசியல்வாதிகள், எதுவும் செய்யாமல் மக்கள் மீது பாரத்தைச் சுமத்திவிட்டு, தங்களைத் தாங்களே புகழ்ந்து கொண்டு, குற்றத்தை எதிரணியினர் மீது சுமத்திவிடுவார்கள். இந்த முறைமையை எல்லா அரசியல்வாதிகளும் செய்வார்கள். இது புதுமையே இல்லை.

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள், மலைநாட்டுத் தமிழர்களின் வறுமைநிலை ஒழிப்பு என ஒட்டுமொத்தத் வாழ்வாதாரத் துன்பங்களை எவர் தீர்க்கப்போகின்றார்?

எல்லா அழுத்தங்களையும் எப்படித் தாங்குவது? மக்கள் உழைக்கிறார்கள். ஆனால், வசதிகள் இல்லை. முற்றுப் பெறாத துன்பங்கள் இல்லை. எளிய மக்களின் ஆத்மிக பலம், வெளிச்சத்தைக் காட்டும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### குடிநீர் இன்றி அல்லலுறும் ஆனந்தபுரம் மக்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தின், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆனந்தபுரம் கிராம மக்கள், குடிநீரின்றி பன்னெடுங்காலமாக பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

குறித்த கிராமத்தில், நிலத்தடி நீர் உவர் நீராக காணப்படுகின்ற காரணத்தால், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் முதலாவது குடிநீர் திட்டமாக ஆனந்தபுரம் தெரிவு செய்யப்பட்டு, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் கூட்டங்கள் 2017 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன.

இதன்பின்னர், நீர் இணைப்பு வேலைகள் படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு நான்கு மாதங்களுக்கு முன்னர் அனைத்து நடவடிக்கைகளும் நிறைவடைந்து, ஒரு நாள் நீர் வழங்கப்பட்டு, நீர் குழாய்கள் சுத்திகரிக்கப்பட்ட நிலைமையின் பின்னரும், இன்றுவரை அந்தக் குழாய் நீர் ஊடாக குடிநீர் கிடைக்கவில்லை.

குறித்த கிராமத்தில், அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஊடாக குடிநீர் வழங்கும் செயற்பாடுகள் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்திருந்தாலும், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் இந்தக் குடிநீர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னணியில், அனர்த்த முகாமைத்துவ பிரிவு வழங்கி வந்த குடிநீரும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் எந்த வகையிலுமே குடிநீரைப் பெற்றுக் கொள்ள முடியாமல், ஆனந்தபுரம் மக்கள் திண்டாடி வருகின்றனர்.

எந்த ஒரு தேவைக்கும் நல்ல குடிநீரை பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்ற நிலையில், மிக விரைவில் குடிநீரை வழங்க, உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை முன்வைக்கிறார்கள்

–சண்முகம் தவசீலன்

## அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம்:

# மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்குமா?

மொஹமட் பாதுஷா

நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கும், தமக்கு ஏற்பட்டுள்ள வாழ்வாதார சுமைக்கும் அவசரமான தீர்வைக் காணுமாறு, நாடெங்கும் மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில், அதற்கான உடனடி வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதை ஒருபுறம் வைத்துவிட்டு, அரசியலமைப்பை இன்னுமொரு தடவை திருத்துவது தொடர்பான விடயத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதை காணக் கூடியதாகவுள்ளது.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் சிபாரிசுகளை மீளக்கொண்டு வருவதுடன், அதனூடாக நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிக்கப் போவதாக, பிரதான எதிர்க்கட்சி அறிவித்துள்ளது. அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

அதேநேரம், தாம் கொண்டு வந்த 20ஆவது திருத்தமே, அநேகமான நெருக்கடிகளுக்குக் காரணம் என்ற தோரணையில், இப்போது அந்தத் திருத்தத்தை நீக்கும் யாப்புத் திருத்தத்தைக் கொண்டு வரவுள்ளதான தோற்றப்பாட்டை ஆளும் தரப்பு ஏற்படுத்தியுள்ளது.

இவை இரண்டுமே ஒன்றுதான்! அதாவது, அரசியலமைப்பில் 20ஆவது திருத்தத்தை வலுவிழக்கச் செய்தும், 19 இனை பலப்படுத்தியும் 21ஆவது யாப்புத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்மூலம், நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற நிகழ்கால நெருக்கடிகள் அனைத்துக்கும், அரசியலமைப்பின் ஏற்பாடுகளே காரணம் என்பதான தோற்றப்பாட்டை, ஆளும் மற்றும் எதிர்த்தரப்பு ஏற்படுத்த முனைகின்றதா? என்ற கேள்வி எழுகின்றது.

நாட்டில் அரசியல் அல்லது ஆளுகையில், முறைமைசார் மாற்றம் ஏற்பட வேண்டுமென்ற கருத்துகள் இப்போது வலுப்பெற்றுள்ளன. ராஜபக்ஷர்களை வீட்டுக்கு அனுப்பவதன் மூலம், அதைச் செய்யலாம் என்ற பார்வைதான் பொதுவாக மக்களிடம் உள்ளது. ஆனால், அவர்களை ஆட்சியில் இருந்து நீக்குவதால் மட்டும், முறைமை மாற்றம் முழுமையாக ஏற்பட்டு விடாது என்பதே யதார்த்தமாகும்.

முறைமை மாற்றத்தை ஏற்படுத்துதலின் ஒரு முக்கிய அங்கமாக, அரசியலமைப்பு மற்றும் சட்ட ஏற்பாட்டு திருத்தங்கள் அவசியமாகின்றன. ஆனால், இலங்கையைப் பொறுத்தமட்டில், அரசியலமைப்பில் பல நல்ல ஏற்பாடுகள் உள்ளன. ஆனால், அதனை ஆட்சியாளர்களும் பெருந்தேசிய கட்சிகளும், நாட்டுக்காக மக்களின் நலனுக்காகத் திறன்படப் பயன்படுத்தவில்லை என்பதுதான் சரியான உண்மையாகும்.

ஆக, இங்கே குறைபாடு அல்லது அதிகபட்ச தவறு என்பது, பெரும்பாலும் அரசியலமைப்பைச் சார்ந்ததல்ல. மாறாக, அரசியல் தரப்புகளைச் சார்ந்திருப்பதாகும்.

எவ்வாறாயினும், நாட்டின் அடிப்படை சட்ட ஏற்பாடுகளைத் திருத்துவது, நிலைபேறான தீர்வுகளுக்கு வழிவகுக்கும் என்ற அடிப்படையில், அரசியலமைப்பில் பல திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. ஆனால், அதைச் செய்வதற்கு, இது பொருத்தமான காலமா என்பதுதான் இங்கு ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

நாட்டின் பொருளாதாரம், இப்போது எல்லா மட்டங்களிலும் சீர்குலைந்துள்ளது. டொலர் நெருக்கடியும் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியும் தொடர்கின்றன. பொருட்களின் விலைகள், நூறு முதல் இருநூறு மடங்கால் அதிகரித்துள்ளன. மக்கள், பொருட்களைப் பெற்றுக் கொள்ள நீண்ட வரிசைகளில் நாள்கணக்காக நிற்க வேண்டி ஏற்பட்டுள்ளது. வரிசைகளிலேயே பலர் உயிரை விட்டுள்ளனர்.

இதற்கான தீர்வைத் தேடுமாறு, மக்கள் கோரிக்கை விடுத்தனர். அரசாங்கம் கண்டு கொள்ளவில்லை. தான்பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்ற தோரணையில் செயற்பட்டது. அதன் பிறகுதான், மக்கள் வீதிக்கு இறங்கினர்.

இன்று, காலி முகத்திடலில் நடக்கும் முற்றுகைப் போராட்டத்தை, அரசாங்கம் எவ்விதம் சித்திரித்தாலும், அதன் மூலம் ஆட்சியாளர்களுக்கு உள்ளுக்குள் ஓர் உதறல் ஏற்பட்டிருக்கின்றது. அத்துடன், மிக நேர்த்தியான இந்த அமைதிப் போராட்டம், சர்வதேச சமூகத்தின் அவதானத்தையும் பெற்றுள்ளது.

எனவே, ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்டோர் பதவி விலகி, புதிய இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு இடமளித்திருக்க வேண்டும். இடைக்கால அரசாங்கத்தின் ஊடாக, மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ள வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கு, உடனடியாகத் தீர்வு காணப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், அரசாங்கம் என்ன செய்தது?

அமைச்சரவையை மாற்றினால் எல்லாம் சரியாகி விடும் என்பதாகக் காட்டிக் கொண்டு, புதிய அமைச்சரவை ஒன்றை நிறுவியுள்ளது. இருப்பினும், மறுநாளே இரு பிரதான பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. இன்றைய நிர்க்கதி நிலைக்கு, ஜனாதிபதியும் பிரதமரும் எடுத்த தீர்மானங்கள் காரணமாக அமையவில்லை என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி, அமைச்சர்களை மாற்றியமைத்தனர்.

சரியாக அதே பாணியிலேயே, இப்போது அரசியலமைப்பைத் திருத்துதல் எனும் தாரக மந்திரத்தை, குறிப்பாக, பிரதமர் தரப்பு ஓதத் தொடங்கியுள்ளது.

அதாவது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை, 20ஆவது திருத்தம் வழங்கிய அதீத அதிகாரம் ஆகியவையே இந்த நிலைமைக்குப் பிரதான காரணம் என்பதான தோற்றப்பாட்டை ஏற்படுத்த முயற்சி செய்யப்படுகிறது.

இந்நிலையில், நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் 19ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதை அப்போதைய எதிர்க்கட்சியான இப்போதைய ஆளும் அணி கடுமையாக எதிர்த்தது. பின்னர் ராஜபக்ஷர்கள் ஆட்சியமைத்த போது, பலரும் எதிர்பார்த்தபடி 19ஆவது திருத்தத்தை இல்லாமலாக்கும் வகையில், 20ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது.

அதுமட்டுமன்றி, இரட்டைப் பிரஜாவுரிமை, ஜனாதிபதியாகப் போட்டியிடுவதற்கான ஆகக் குறைந்த வயதெல்லை எனப் பல ஏற்பாடுகளில் நினைத்துப் பார்க்க முடியாத திருத்தங்கள், ராஜபக்ஷ குடும்பத்துக்குச் சாதகமான விதத்தில் கொண்டு வரப்பட்டன.

இவ்வாறான திருத்தங்களைக் கொண்டு வரவேண்டாம் என்று, துறைசார்ந்தவர்களும் சமூக சிந்தனையாளர்களும் ராஜபக்ஷர்களுக்கு அப்போது அறிவுறுத்தினர். இதன்மூலம் எடுக்கப்படக் கூடிய அதிகார துஷ்பிரயோக வகையிலான தீர்மானங்களால், எதிர்காலத்தில் நாட்டுக்கு ஆபத்தாக வந்து முடியும் என்று சுட்டிக்காட்டினர்.

ஆனால், அரசாங்கம் அவற்றைக் கண்டு கொள்ளவில்லை. விஜயதாஸ ராஜபக்ஷ போன்ற சட்ட நிபுணர்கள் மட்டுமன்றி, 19இனை ஆதரித்த முஸ்லிம் எம்.பிக்களும் 20 இற்கு ஆதரவாக கையை உயர்த்தி, ராஜபக்ஷ குடும்பத்தின் திருப்தியைப் பெற்றுக் கொண்டனர்.

ஜனாதிபதியும் பிரதமரும் பசிலும் எடுத்த தீர்க்கதரிசனமற்ற தீர்மானங்கள்தான், இந்தளவுக்கு மோசமான பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன என்பதை இன்று, ஆளும் தரப்பினரே ஏற்றுக் கொள்கின்றனர்.

அப்படியென்றால், இவர்களுக்கு ஆதரவளித்தவர்களும் 20 இற்கு கையுயர்த்தியவர்களும் முட்டாள்தனமான முடிவுகளை எடுத்தவர்களுமே இந்த விடயத்தில் குற்றவாளிகள் ஆவர். எனவே, அவர்கள் அதற்குப் பிராயச்சித்தம் செய்யத் தவறியுள்ளதால் பதவி விலக வேண்டும் என்றுதான் மக்கள் கூறுகின்றனர். அதன்மூலம் தமது கஸ்டங்கள் தீரும் என நினைக்கின்றனர்.

இதைத்தான் எதிரணியும் கூறி வந்தது. இப்போது, அரசாங்கம் தம்மீதான பழியை மறைத்து விட்டு, 19 திருத்தத்தின் முக்கிய ஏற்பாடுகளுடன் 20 இனை வலுவிழக்கச் செய்யும் 21ஆவது திருத்தம் கொண்டுவந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று கூறும் பாணியில் செயற்படுகின்றது.

இதன்மூலம் தாம் செய்த தவறுகள், எடுத்த பிழையான தீர்மானங்களுக்கான பொறுப்புக்கூறலை, வேறு திசைநோக்கி திருப்பிவிட முனைவதாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

அரசியலமைப்பில் ஆரோக்கியமான மாற்றங்களைக் கொண்டு வந்து அதைத் திருத்துவது, அவசியமான ஒன்று என்பதை மறுக்க முடியாது. அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கு காலம் எடுக்கும் என்றபடியால், குறைந்தபட்சம் 21ஆவது திருத்தத்தையேனும் கொண்டுவந்தால், நீண்டகாலத்தில் முறைமை மாற்றம் ஏற்படுவதற்கான அடித்தளமாக அது அமைவதற்கான ஏதுநிலைகள் பல உள்ளன.

ஆனால், இங்குள்ள பிரச்சினை அதுவல்ல!

மக்கள் தற்போது எதிர்நோக்கியுள்ள பொருட்களின் விலை அதிகரிப்பு, தட்டுப்பாடு, வாழ்க்கைச் சுமை அதிகரிப்பு, கொள்வனவு சக்தி குறைவடைந்தமை போன்ற அன்றாடப் பிரச்சினைகளுக்கு இந்த உத்தேச அரசியலமைப்பு திருத்தம் தீர்வைப் பெற்றுத் தருமா என்பதே இங்குள்ள வினாவாகும்.


இன்று மக்களின் உடனடித் தேவைப்பாடுகள் இரண்டு எனலாம். ஒன்று, அன்றாட வாழ்க்கைக்கான சூழலை ஏற்படுத்துதல்; இரண்டு, அதற்கு காரணமாக இருந்தவர்களை வீட்டுக்கு அனுப்புதலாகும்.

அவர்களே தொடர்ந்தும் அதிகாரத்தில் இருந்து கொண்டு, சட்ட ஏற்பாடுகளை திருத்துவதன் மூலம் தமது தவறுகளை இன்னுமொன்றின் மீது போட்டுவிட்டு, காலத்தை இழுத்தடிப்பதை எவரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

ஆகவே, இன்று புதிய யாப்புத் திருத்தத்தை கொண்டு வருவதற்கு முன்னதாக, அரசாங்கத்தாலும் எதிர்த்தரப்பாலும் அவசரமாகச் செய்யப்பட வேண்டிய பணி, நாட்டு மக்கள் எல்லோரும் எதிர்கொண்டுள்ள குடும்பப் பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்த்து வைத்து, நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதாகும்.

திருத்தத்தை தயாரித்து, சட்டமூலமாக நாடாளுமன்றத்திற்கு கொண்டு வந்து, வாதம் நடத்தி, நிறைவேற்றி, அதன்மூலம் கட்டமைப்பு மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி, அதனூடாக மக்கள் பிரச்சினைகளை தீர்த்து வைக்க நீண்டகாலம் எடுக்கும். அதுவரையும், மக்கள் இந்த நெருக்கடிளை தாக்குப் பிடிக்க மாட்டார்கள் என்பதை ஆளும், எதிர்க்கட்சிகள் மறந்து விடக் கூடாது.

# திடீர் சிக்கலில் 'கேஜிஎஃப் 2'



யாஷ் நடித்த 'கேஜிஎப் 2' திரைப்படம் கடந்த ஏப்ரல் 14ஆம் திகதி வெளியாகி உலகம் முழுவதும் வெற்றி நடைபோடுகிறது. தங்கச் சுரங்கத்தில் அடிமையாக வேலை செய்யும் மக்களை மீட்டு அந்த மக்களுக்கு நல்ல வாழ்கையை அமைத்து தர முயற்சி செய்யும் ஒரு ஹீரோவின் கதைதான் கேஜிஎப் 2.

இந்த நிலையில் இந்தக் கதை எனது மகனின் கதை என்று பெண் ஒருவர் குற்றச்சாட்டு கூறியிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. தனது மகன் கேஜிஎஃப் தங்க சுரங்கத்தில் வேலை பார்த்ததாகவும் அந்த பெண் கூறியுள்ளார்.

அதன்போது, அங்கு ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்து தங்கத்தை கொள்ளையடித்து ஏழைகளுக்கு உதவி செய்த தனது மகன் கடந்த 1996ஆம் ஆண்டு பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தனது மகனின் கதையை தனது அனுமதியில்லாமல் படக்குழுவினர் படமெடுத்து உள்ளதாகவும் அதுமட்டுமின்றி தனது மகனை கெட்டவனாக சித்திரித்துள்ளார்கள் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எனினும், இந்தக் குற்றச்சாட்டு திரைப்படக்குழுவினர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தினாலும் அந்த பெண் கூறுவதில் உண்மை இல்லை என்று மறுத்துள்ளனர்.



# மேடையில் விசிலடித்த நடிகை

தமிழில் முதன்முறையாக தெலுங்கு ஹீரோ ராம் பொத்தினேனி நடிக்கும் 'தி வாரியர்' திரைப்படத்தில் சிலம்பரசன், ஹரிபிரியா பாடிய 'புல்லட்' என்ற முதல் பாடலை சென்னையில் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் திரைப்படத்தின் நடிகையான கீர்த்தி ஷெட்டியும் கலந்துகொண்டார். அப்போது பேசிய அவர், இயக்குநர் லிங்குசாமிக்கும், திரைப்படத்தை சேர்ந்தவர்களுக்கும் தனது நன்றியை தெரிவித்துக்கொண்டார்.

தமிழ் ரசிகர்கள் தனக்கு மிகுந்த ஆதரவினை அளிப்பதாக கூறி நன்றி தெரிவித்தார். அப்போது திரைப்படத்தில் நடிகை விசில் அடிக்கும் காட்சிகள் இருப்பதை அறிந்த தொகுப்பாளர், ரசிகர்களுக்காக விசிலடிக்குமாறு கோரினார்.

இதையடுத்து இயக்குநரின் அனுமதியை பெற்ற கீர்த்தி ஷெட்டி, மேடையிலேயே விசிலடித்து அசத்தினார்.



# நஸ்ரியாவின் விளக்கம்

'நேரம்' திரைப்படத்தின் மூலமாக தமிழ் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமானவர் நஸ்ரியா. 'ராஜா ராணி', 'நையாண்டி', 'வாயை மூடி பேசவும்', 'திருமணம் எனும் நிக்காஹ்' ஆகிய திரைப்படங்களிலும், ஏராளமான மலையாள திரைப்படங்களிலும் நடித்திருக்கிறார். இவரது 'துறுதுறு' நடிப்புக்கும், கொஞ்சல் சிரிப்புக்கும் ரசிகர்கள் ஏராளம். முன்னணி நடிகையாக இருந்தபோதே நடிகர் பகத் பாசிலை திருமணம் செய்துகொண்டார். அதன்பிறகு திரைப்படங்களில் நடிக்காமல் ஒதுங்கி இருந்தார்.

சிறிய இடைவெளிக்கு பிறகு நஸ்ரியா மீண்டும் சினிமாவுக்கு திரும்பியுள்ளார். தெலுங்கில் நானி ஜோடியாக 'அன்டே சுந்தரனிகி' என்ற திரைப்படத்தில் நஸ்ரியா நடித்துள்ளார்.

லீலா தோமஸ் என்ற கிறிஸ்தவ பெண்ணாக அவர் நடித்திருக்கிறார். இந்தத் திரைப்படத்தின் அறிமுக விழாவில் கலந்துகொண்ட நஸ்ரியாவிடம், "இஸ்லாமிய பெண்ணாக இருந்துகொண்டு, திரைப்படத்தில் கிறிஸ்தவ பெண் கதாபாத்திரத்தில், இந்து ஆணுக்கு மனைவியாக நடித்து இருக்கிறீர்கள். எப்படி இது சாத்தியம்", என்று வில்லங்கமான கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு நஸ்ரியா, "எனக்கு கதை பிடித்து இருந்தது. அதனால் உடனடியாக நடிக்க ஒப்புக்கொண்டேன். கதாபாத்திரத்தை புரிந்துகொண்டு நடித்தேன், அவ்வளவுதான்" என்று விளக்கம் கொடுத்தார்.

# பிரபல ஹீரோவுடன் பிரியங்கா மோகன்!



'டொக்டர்' திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமான நடிகை பிரியங்கா மோகன், அடுத்ததாக தமிழின் முன்னணி நடிகருடன் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

தெலுங்கு மற்றும் கன்னட திரைப்படங்களில் நடித்துக்கொண்டிருந்த நடிகை பிரியங்கா மோகன்,சிவகார்த்திகேயன் நடிப்பில் நெல்சன் இயக்கத்தில் உருவான 'டொக்டர்' திரைப்படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார்.

அதன் பிறகு சூர்யாவின் 'எதற்கும் துணிந்தவன்' சிவகார்த்திகேயனின் 'டான்'ஆகிய திரைப்படங்களில் நடித்துள்ள பிரியங்கா மோகன், அடுத்ததாக ரஜினிகாந்த் நடிப்பில் நெல்சன் இயக்கத்தில் உருவாக இருக்கும் 'தலைவர் 169' திரைப்படத்தில் நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், இயக்குநர் எம் ராஜேஷ் இயக்கத்தில் ஜெயம் ரவி நடிக்கும் திரைப்படத்தில் பிரியங்கா மோகன் தான் நாயகி என்றும் இதுகுறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.

# காதலின் கடைசி வலி



விக்னேஷ் சிவன் இயக்கத்தில் விஜய்சேதுபதி, நயன்தாரா மற்றும் சமந்தா நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'காத்துவாக்குல ரெண்டு காதல்'. அனிருத் இசையில் உருவாகிய இந்தத் திரைப்படத்துக்கு மிகப்பெரிய எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் திரைப்படம் வெளியாக இன்னும் ஒருசில நாட்களே இருக்கும் நிலையில் விக்னேஷ் சிவன் தனது சமூக வலைத்தளத்தில் ஒரு உணர்ச்சிகரமான பதிவு செய்துள்ளார்.

"என் லவ் மற்றும் பேபி உடன் கடைசி சில நாட்கள். இந்த வலி தேவை தான். காதல் என்றாலே வலி இருக்கும். ஒரு திரைப்படம் வெளியாகும்முன் கடைசி சில நாட்கள் பிரசவ வலிக்கு இணையானது. இசையமைப்பாளர் அனிருத்துடன் தொடர்ச்சியாக ஒவ்வொரு காட்சியையும் மீண்டும் மீண்டும் பார்த்து வருகிறேன். இந்தத் திரைப்படத்தில் அனைவரும் அருமையாக நடித்திருக்கிறார். நேசத்துடன் இந்த திரைப்படத்துக்காக அதிகம் உழைத்து உள்ளேன்" என்று உணர்ச்சிகரமாக பதிவு செய்துள்ளார்.

தமிழகம்

இலங்கை தமிழர்களை

# அகதிகளாக அறிவிக்கவும்

தமிழ்நாட்டில் வாழும் இலங்கை தமிழ் அகதிகள் அனைவரும் சட்டவிரோதமாக இந்தியாவுக்குள் குடியேறியவர்கள் என்றும் அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க முடியாது என்றும் மத்திய அரசு தெரிவித்திருந்தது.



இந்நிலையில் "வாழ வழியின்றி வந்தவர்களை அகதிகளாக அறிவிக்காமல், சட்டவிரோத குடியேறிகளாகவே வைத்திருப்பது இந்தியா போன்ற, பன்னாட்டு அரங்கில் மனித உரிமைகளுக்காக குரல் கொடுத்து வரும் நாட்டுக்கு அழகல்ல" என பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் "மனிதநேய அடிப்படையில் தஞ்சம் தேடி தமிழ் நாட்டிற்கு வரும் இலங்கை தமிழர்களை அகதிகளாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும்; சட்டப்பூர்வ உதவிகளை தமிழ்நாடு அரசு வழங்குவதற்கு அனுமதிக்க வேண்டும்" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை

## பப்ஜி மதன் வழக்கில் புதிய திருப்பம்

தடை செய்யப்பட்ட ஒன்லைன் விளையாட்டுகளில் விளையாடியதோடு, நேரலையில் ஆபாசமாகப் பேசியதாக அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், பிரபல யூடியுபரான பப்ஜி மதனுக்கு எதிராக மத்திய குற்றப்பிரிவுப் பொலிஸார் கடந்த ஆண்டு வழக்குப் பதிவு செய்தனர்.

இவ் வழக்கில் கடந்த 2021ஆம் ஆண்டு ஜூன் 18 ஆம் திகதி தர்மபுரியில் கைது செய்யப்பட்ட பப்ஜி மதன், புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

மேலும் அவருக்கு எதிராக பண மோசடி உள்ளிட்ட புகார்கள் எழுந்த நிலையில், பப்ஜி மதனை சைபர் சட்ட குற்றவாளி என அறிவித்துக் குண்டர் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கக் கடந்த ஆண்டு ஜூலை மாதம் மாநகர காவல் ஆணையர் உத்தரவிட்டார்.

எனினும் தன் மீதான குண்டர் சட்டத்தை இரத்து செய்யக் கோரி, பப்ஜி மதன் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனுவொன்றைத் தாக்கல் செய்தார். இம் மனு மீதான விசாரணை அண்மையில் நடைபெற்றது.

இதில், பப்ஜி மதனின் குண்டர் சட்டத்தை இரத்து செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.



புதுச்சேரி

## கறுப்புக்கொடிகளை ஏந்திய 200 பேர் கைது

ஒரு நாள் அரசு முறைப் பயணமாக உள்துறை அமைச்சர் அமித் ஷா நேற்று முன் தினம் (24) புதுச்சேரிக்கு வருகை தந்தார்.




அவரது வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மதசார்பற்ற அரசியல் கட்சிகள் மற்றும் பல்வேறு இயக்கங்கள் கடும் எதிர்ப்புகளைத் தெரிவித்து வந்தனர்.

குறிப்பாக, தந்தை பெரியார் திராவிட கழகத்தைச் சேர்ந்த சுமார் 200க்கும் மேற்பட்டோர் "திரும்பிப்போ அமித் ஷா!" என்ற கோஷத்தை முன்வைத்து கறுப்புக்கொடிகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அமித்ஷாவின் உருவபொம்மையை எரிக்கும் முயற்சியிலும் போராட்டக்காரர்கள் ஈடுபட்டதாகவும் இதனால் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் வெடித்ததாகவும், இதனையடுத்து அமித் ஷாவின் உருவ பொம்மையை எரிக்க முயன்ற 200 க்கும் மேற்பட்டோரைப் பொலிஸார் கைது செய்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் இளங்கோ கூறும்போது, "அமித்ஷாவின் வருகையால் மாநிலத்திற்கு எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை" எனத் தெரிவித்தார்.

கர்நாடகா

## பார்வையற்ற சகோதரர்கள் வடிவமைத்த தேர்



பார்வையற்ற சகோதரர்கள் இருவர் சுமார் 29 அடி உயரத்தில் தேர் ஒன்றை வடிவமைத்துள்ளார்கள். கர்நாடகம், பாகல்கோட்டையை சேர்ந்த சுரேஷ், மகேஷ் ஆகிய இரு சகோதரர்களே குறித்த தேரை வடிவமைத்து சாதனை படைத்துள்ளனர்.

இவர்களின் தந்தையான மல்லப்பா, தேர்களை வடிவமைப்பதில் கைதேர்ந்தவர் எனவும், அவர் பல கோவில்களுக்குத் தேர்களை வடிவமைத்துக் கொடுத்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 2018 ஆம் ஆண்டு உடல் நலக் குறைவு காரணமாக அவர் மரணத்தைத் தழுவிய நிலையில், அவர் வடிவமைத்து வந்த மாருதேஸ்வரா கோவிலின் தேர் பணியானது இடையில் நிறுத்தப்பட்டது. இதையடுத்து தமது தந்தை தொடங்கிய பணியை நிறைவு செய்யும் விதமாக பார்வையற்ற குறித்த சகோதரர்கள் இருவரும், தமது தாயின் ஆலோசனையின் பேரில் சிற்பி ஒருவரின் உதவியுடன் குறித்த கோவிலுக்கு 29 அடி உயரம் கொண்ட தேரினை வடிவமைத்து கையளித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆந்திரா

## பேயால் ஊரடங்கு

### அடுத்தடுத்து ஐவர் உயிரிழப்பு



தமது கிராமத்தைப் பேய்கள் சூழ்ந்துள்ளதாக நம்பிய பொதுமக்கள் 2 நாள்களாகத் தமது வீடுகளுக்குள் முடங்கியுள்ள சம்பவம் ஆந்திராவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திர மாநிலம் ஸ்ரீ காகுளம் மாவட்டம் சருபுஜ்ஜிலி கிராமத்தைச் சேர்ந்த மக்களே இவ்வாறு தமது வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர். குறித்த கிராமத்தில் அடுத்தடுத்து ஐவர் உயிரிழந்துள்ள நிலையில், அங்கு பேய்களின் நடமாட்டம் காணப்படுவதாக மந்திரவாதி ஒருவர் தெரிவித்ததாகவும், இதனால் அச்சமடைந்த மக்கள் தங்களை காப்பாற்றிக்கொள்ள சிறப்புப் பூஜைகளை செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 2 நாள்கள் யாரும் வீட்டை விட்டு வெளியேறக்கூடாது என உத்தரவிடப்பட்டு உள்ளதாகவும் இதையறிந்த பொலிஸார் அக் கிராமத்திற்கு சென்று, "பேய்கள் என்பது உலகத்தில் கிடையாது. இது போன்ற மூட நம்பிக்கைகளை நம்ப வேண்டாம்" என பொதுமக்களுக்கு அறிவுரை கூறியதாகவும், ஆனாலும் கிராம மக்கள் தொடர்ந்து பூஜையைச் செய்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை

## ஆசிரியைகளுக்கு பாலியல் தொல்லை; தலைமை ஆசிரியர் கைது



ஆசிரியைகளுக்குப் பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில் தலைமை ஆசிரியர் கைது செய்யப்பட்ட சம்பவம், மதுரையில் இடம்பெற்றுள்ளது.

மதுரை, கீரைத்துறையை சேர்ந்த ஜோசப் ஜெயசீலன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள அரச பாடசாலையொன்றில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிவந்த அவர், அப்பாடசாலையில் புதிதாக இணைந்த இரு ஆசிரியைகளுக்குப் பாலியல் தொல்லை அளித்து வந்துள்ளார்.

இதையடுத்து பாதிக்கப்பட்ட ஆசிரியைகள், பணி மாறுதல் கேட்டு விண்ணப்பித்து, பணிமாறுதல் கிடைத்த நிலையிலும் அவர்களை பணியில் இருந்து ஜோசப் ஜெயசீலன் விடுவிக்கவில்லை.

இதனால் விரக்தி அடைந்த ஆசிரியை, மதுரை மகளிர் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்த நிலையில், குறித்த தலைமை ஆசிரியர் தலைமறைவானதுடன் தனது அடையாளங்களை மாற்றிக்கொண்டு திருப்பூர், கோயம்புத்தூர் உள்ளிட்ட மாவட்டங்களில் பதுங்கியிருந்துள்ளார்.

இந்நிலையில் பொலிஸாரின் தீவிர தேடுதலில் அவர் நேற்றைய தினம்(24) கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல்:

## மும்பைக்கு எட்டாவது தோல்வி

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸுடனான போட்டியிலும் தோற்றமையைத் தொடர்ந்து இவ்வாண்டு தொடர்ச்சியாக எட்டாவது போட்டியில் மும்பை இந்தியன்ஸ் தோல்வியைச் சந்தித்துள்ளது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற மும்பையின் அணித்தலைவர் றோஹித் ஷர்மா, லக்னோவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ, அணித்தலைவர் லோகேஷ் ராகுலின் ஆட்டமிழக்காத 103 (62) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், கெரான் பொலார்ட் 2-0-8-2 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு, 169 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மும்பை, க்ருனால் பாண்டியா (3), மொஷின் கான், ஆயுஷ் படோனியிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்று 36 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், துஷ்மந்த சமீர 4-0-14-0 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக ராகுல் தெரிவானார்.

இந்நிலையில், பூனேயில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸை றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் எதிர்கொள்ளவுள்ளது.

ஸ்பானிய லா லிகா தொடர்:

## றயோ வலெக்கனோவிடம் தோற்ற பார்சிலோனா



ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகா தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற றயோ வலெக்கனோவுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா தோற்றது.

அந்தவகையில், லா லிகா புள்ளிகள் பட்டியலில் 78 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் றியல் மட்ரிட் உள்ளது. 63 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் பார்சிலோனாவும், 63 புள்ளிகளைப் பெற்றபோதும் பார்சிலோனாவுடனான நேரடிப் போட்டிகளில் சரியாக விளையாடமை காரணமாக மூன்றாமிடத்தில் செவிய்யாவும், 61 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் நடப்புச் சம்பியன்களான அத்லெட்டிகோ மட்ரிட்டும் காணப்படுகின்றன.

அல்தாரிக்கேயன்ஸ் மெகா பிளஸ் கிரிக்கெட் தொடர்:

## சம்பியனான 2002ஆம் ஆண்டு அணி




■ எப். முபாரக்

திருகோணமலை கந்தளாய் அல் தாரீக் மகா வித்தியாலய தேசிய பாடசாலையின் 54ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பாடசாலை பழைய மாணவர்களுக்கிடையிலான மாபெரும் "அல்தாரிக்கேயன்ஸ் மெகா பிளஸ்" கிரிக்கெட் தொடர், அல் தாரீக் பாடசாலை விளையாட்டு மைனத்தில் கல்லூரியின் அதிபர் ஏ.கே.நசூர் தலைமையில் நடைபெற்றது.

இக்கல்லூரியில் கல்வி கற்ற கல்விப் பொது தராதர சாதாரண பரீட்சைக்குத் தோற்றிய 24 அணிகள் பங்குபற்றின.

மூன்று நாட்கள் நடைபெற்ற இத்தொடரானது, எட்டு ஓவர்களைக் கொண்டு அணிக்கு பதினொரு பேரை கொண்ட விலகல் அடிப்படையில் அமைந்திருந்தன.

இறுதிப் போட்டியில் 2008ஆம் ஆண்டு அணியை வென்று 2002ஆம் ஆண்டு அணி சம்பியனானது.



பருத்தித்துறை பிரதேச செயலக கழக ஆண்களுக்கான எல்லே:

## சென். தோமஸ் சம்பியன்

■ எஸ். தில்லைநாதன்


பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான எல்லே போட்டியில் பருத்தித்துறை சென். தோமஸ் விளையாட்டு கழக அணி சம்பியனாகியது

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழகத்தை வென்றே சென். தோமஸ் சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். தோமஸ் அணி வழங்கப்பட்ட 40 பந்துகளில் இரண்டு ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி வழங்கப்பட்ட 40 பந்துகளில் ஓர் ஓட்டத்தை மாத்திரம் பெற்று தோல்வியடைந்தனர்.

பாகிஸ்தான்

# ஷெரீப் மீதான தடை நீக்கம்



பாகிஸ்தானில் இம்ரான் கான் தலைமையில் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது எதிர்க்கட்சி தலைவரான ஷபாஸ் ஷெரீப், மகன் ஹஸ்மா ஷபாஸ், சகோதரர் மற்றும் முன்னாள் பிரதமருமான நவாஸ் ஷெரீப், அவரது மகள் மரியம் நவாஸ் போன்றவர்கள் மீது பல்வேறு ஊழல் புகார்கள் போடப்பட்டு வழக்குப்பதிவு செய்து விசாரணை நடைபெற்று வந்தது.

மேலும் விசாரணையின் போது அவர்கள் வெளிநாடு செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் சமீபத்தில் இம்ரான் கானுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து பாகிஸ்தானின் புதிய பிரதமராக ஷபாஸ் ஷெரீப் பதவியேற்றார்.

அதேசமயம் பஞ்சாப் மாநிலத்திற்கு முதலமைச்சராக அவரது மகன் ஹஸ்மா ஷபாஸ் தெரிவு செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து வெளிநாடு செல்வதற்கு தடைவிதிக்கும் பட்டியலை மறுபரிசீலனை செய்ய கடந்த வாரம் மந்திரி சபை கூட்டம் பிரதமர் ஷபாஸ் ஷெரீப் தலைமையில் நடத்தப்பட்டு அதில் உள்துறை அமைச்சகத்துக்கு அங்கீகாரத்தை கொடுக்க உத்தரவிடப்பட்டது.

இந் நிலையில் உள்துறை மந்திரி ராணா சனாவுல்லா பிரதமர் ஷபாஸ் ஷெரீப், நவாஸ் ஷெரீப், ஹஸ்மா ஷபாஸ் மற்றும் மரியம் நவாஸ் உட்பட 4,863 பேரின் பெயர்கள் குறித்த பட்டியலில் இருந்து நேற்று முன்தினம் (24) நீக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

பிரான்ஸ்



## மீண்டும் ஜனாதிபதியானார் இமானுவேல் மேக்ரோன்


பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் இமானுவேல் மேக்ரோன், (Emmanuel Macron) 58.5 சதவீத வாக்குகளை பெற்று 2 ஆவது முறையாகவும் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம்(24) வெளியிடப்பட்ட தேர்தல் முடிவுகளின் படி தீவிர வலதுசாரி போட்டியாளரான மரீன் லு பென்னைத் (Marine Le Pen) தோற்கடித்து, இம்மானுவேல் மேக்ரான் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

44 வயதான மேக்ரோன், இரண்டாவது முறையாகப் பதவியேற்கும் மூன்றாவது பிரான்ஸ் ஜனாதிபதி என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மேக்ரோனுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரித்தானியப் பிரதமர் போரிஸ் ஜோன்சன், இந்தியப் பிரதமர் மோடி உட்பட பல்வேறு நாட்டுத் தலைவர்களும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

அமெரிக்கா



## ரசிகரைத் தாக்கிய மைக் டைசன்



பிரபல முன்னாள் குத்துச்சண்டை வீரரான மைக் டைசன், தன்னுடன் புகைப்படம் எடுக்க விரும்பிய ரசிகரை தாக்கிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சான் பிரான்சிஸ்கோவில் இருந்து ஃப்ளோரிடா நோக்கி பயணித்த விமானத்தில் தன்னுடன் பயணித்த சக பயணியையே அவர் அண்மையில் சரமாரியாகத் தாக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று விமானத்தில் மைக் டைசனுக்குப் பின்னால் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்த அந்நபர் மைக் டைசனுடன் பேசவும், புகைப்படமெடுக்கவும் முயற்சித்தார் எனவும், இதனால் ஆத்திரமடைந்த மைக்டைசன் அந்நபரை கடுமையாகத் தாக்கியுள்ளார் எனவும் இதனால் அவர் முகத்தில் இரத்தக் காயங்கள் ஏற்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மைக்டைசன் அந்நபரைத் தாக்கும் வீடியோவானது இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகின்றது.

எனினும் குறித்த பயணி, மைக் டைசனின் மீது தண்ணீர் போத்தலை வீசியமையினாலேயே அவர் தாக்கியதாக டைசன் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

55 வயதான மைக் டைசன் இதுவரை 58 போட்டிகளில் விளையாடியுள்ளார் என்பதும் அதில் 50 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## ஹைப்பர்சோனிக் தயாரிக்கிறது பிரித்தானியா



ஒலியை விட ஐந்து மடங்கு வேகத்தில் செல்லும் ஹைப்பர்சோனிக் ( hypersonic) விமானத்தைத் தயாரிக்கும் முயற்சியில் பிரித்தானியாவின் விண்வெளி முகமை இறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் தொழில்நுட்பம் கொண்ட இவ்வகை விண்வெளி விமானங்கள் 2030ஆம் ஆண்டுக்குள் பயன்பாட்டுக்கு வரக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் "மணிக்கு 4000 மைல்கள் வரை பயணிக்கக் கூடிய இந்த விமானத்தில் நியூயோர்க்கில் இருந்து லண்டனுக்கு ஒரு மணி நேரத்தில் செல்லலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ் விமானத்தைத் தயாரிப்பதற்காக அவுஸ்திரேலியாவுடன் இணைந்து செயல்பட்டு வருவதாக பிரித்தானியாவின் விண்வெளி முகமைத் தலைமைச் செயல் அதிகாரி கிரகாம் டர்னாக் தெரிவித்துள்ளார்.

லெபனான்

அகதிகள் படகின் மீது கடற்படை கப்பல் மோதியதில்

## குழந்தை உட்பட 6 பேர் உயிரிழப்பு

லெபனானில் அகதிகள் படகின் மீது கடற்படை கப்பல் மோதியதில், படகு கவிழ்ந்து குழந்தை உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியா, லெபனான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 60 பேரை ஏற்றிக் கொண்டு கடந்த 23 ஆம் திகதி குறித்த படகு ஐரோப்பிய நாடுகளைச் நோக்கி சென்றுகொண்டிருந்தபோதே, அவர்களைக் கடத்தல்காரர்கள் என கருதிய லெபனான் கடற்படையினர் குறித்த அகதிகள் படகின் மீது மோதியதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் குறித்த விபத்தில் 47 பேர் மீட்கப்பட்ட நிலையில், மாயமானவர்களைத் தேடும் பணியில் மீட்புப் படையினர் ஈடுபட்டு-வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் செவ்வாயக்கிழமை, 26 ஏப்ரல் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.